வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 18.10.2023 புதன்கிழமை இதழ் : 313 பக்கங்கள் : 16




## தமிழர்களின் குடிப்பரம்பலை சிதைத்தால் தமிழீழ கனவு எவ்வாறு இல்லாமல் போகும்?



### சபையில் கருணாகரம் எம். பி. கேள்வி

கொழும்பு, ஒக். 18

2009 இல் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டோம் என்ற கூறும் நீங்கள் இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு முயற்சி செய்யாமல் வடக்கு கிழக்கிலே புத்த சிலைகளை நிறுவி, பெரும்பான்மையினரைக் குடியேற்றி தமிழ் பேசும் மக்களின் குடிப்பரம்பலைக் குறைப்பதையே அரசு நிகழ்ச்சி நிரலாக வைத்துக் கொண்டால் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தமிழீழ கனவு எவ்வாறு இல்லாமல் போகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில்

11

## பொலிஸ்மா அதிபரை நீக்கும் முடிவை மாற்றியமைத்த ரணில்

கொழும்பு, ஒக். 18

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொலிஸாருக்குப் பொறுப்பான பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸும் இலங்கையில் இல்லாதபோது பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்காக அரசியலமைப்பு பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாற்றியமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவையால் நேற்று அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் பொலிஸ்மா அதிபர் மீண்டும் பதவியில்

11

## ஹர்த்தாலுக்கு தமிழரசு கட்சி ஆதரவளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

நாளை மறுதினம் வடக்கு - கிழக்கில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஹர்த்தாலுக்கு இலங்கை தமிழரசு கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் தமிழரசு கட்சியின் அரசியல் குழு கூட்டம் மெய்நிகர் வழியே நடைபெற்றது. இதன் பின்னர், அந்தக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பின

11

# ஆக்கிரமிப்புக்கு எதிராக தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள் அச்சுறுத்தப்படும் அபாயநிலை!

மட்டக்களப்பு, ஒக்ரோபர் 18

**தொல்லியல், வனவிலங்கு, வனஜீவராசிகள், மகாவலி என்றெல்லாம் பல்வேறு ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சரியான நியாயமான தீர்ப்புகள் வழங்கப்படுகின்ற போது நீதிபதிகள் அரசியல்வாதிகளால் மிகவும் மோசமாக அச்சுறுத்தப்படுகின்ற நிலைமை இலங்கையில் தோன்றியுள்ளது. இதனைக் கண்டிக்கும் முகமாக எதிர்வரும் 20ஆம் திகதி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள நிர்வாக முடக்கப் போராட்டத்துக்கு சகலரும் ஒத்துழைப்பை தரவேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சிகளின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள நிர்வாக முடக்கப் போராட்டத்திற்கு ஆதரவு கோரும் முகமாக நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த ஊடக சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன், ரெலோ சார்பில் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் மாகாண சபை பிரதித் தவிசாளருமான பிரசன்னா இந்திரகுமார், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், புளொட் சார்பில் முன்னாள் மண்முனை

11

## "30 பண்ணைகளை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அரசு முயற்சி!"

கொழும்பு, ஒக். 18

" மில்கோவுக்கு சொந்தமான கொட்டகலை ரொசிட்டா பண்ணை உட்பட 30 பண்ணைகளை இந்தியாவுக்கு விற்க அரசு தயாராகி வருகின்றது." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் நேற்று குற்றஞ்சாட்டினார்.

" முழு பங்குகளும் அரசுக்குரிய மில்கோ நிறுவனம் மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணைகள் தற்போது இந்திய அமுல் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்த கூட்டு நிறுவனமாக நிறுவ அரசாங்கம் தயாராகி வருகின்றது. இந்நிறுவனத்தின் வளங்கள் மூலம் அதிகபட்ச உற்பத்தித் திறனை அடைய அரச நிர்வாகம் தவறியுள்ள தருணத்தில்,

11

## சீன வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

பீஜிங், ஒக். 18

போட்டி நிறைந்த பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி கட்டம் கட்டமாக இலங்கை முன்னேறி வரும் நிலையில், எதிர்கால வர்த்தக வாய்ப்புகளுக்கான தளமாக இலங்கையை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

சீனாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலா தொடர்பான அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடு செய்துள்ள மற்றும் முதலீடு செய்யவிருக்கும் பல சீன வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளும், இலங்கையைச் சேர்ந்த முன்னணி

11

## கீரிமலை ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு வழங்க இடமளியோம்!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை எந்தவித அனுமதிகளும் பெறப்படாமல் எவ்வாறு தனியாருக்கு குத்தக அடிப்படையில் வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திர பிரகாஸ், பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து போராட போவதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்

11

## அடுத்த தேர்தலில் சஜித்துக்கும் அநுரகுமாரவுக்கும்தான் போட்டி

### கூறுகிறார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, ஒக். 18

அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் இடையில்தான் போட்டி காணப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஐக்கிய மக்கள் சக்திக்குதான் மக்கள் மத்தியில் சிறந்த கேள்வி உள்ளது, அடுத்த இடத்தில் ஜே.வி.பி. (தேசிய மக்கள் சக்தி) இருக்கின்றது, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன

11

## இஸ்ரேலில் இலங்கைப் பெண் உயிரிழந்தமை உறுதியாகியது!

கொழும்பு, ஒக். 18

கடந்த 7ஆம் திகதி ஹமாஸ் இஸ்லாமிய போராளிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் காணாமல்போன அனுலா ஜயதிலக்க உயிரிழந்தமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

சடலம் அடையாளம் காணப்பட்ட இரண்டு நாட்களுக்குள் இஸ்ரேல் பொலிஸார் அனுலா ஜயதிலகவின் சடலத்தை தூதரகத்திடம் ஒப்படைப்பார்கள் எனவும் இறுதி மரியாதை மற்றும் சமய சடங்குகள் பற்றிய தகவல்கள் மிக விரைவில் கிடைக்கும் எனவும் பண்டார தெரிவித்தார்.

11

# இப்படியும் நடக்கிறது

'தமிழரசியல் அரங்கில் முல்லைத்தீவு நீதிபதிக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால், 'ரிஸ்க்' எடுப்பதற்கு தயாரில்லாத தலைவர்கள் பொதுமக்களை ரிஸ்க் எடுக்குமாறு தூண்டுகிறார்களா? என்று கேட்கத் தோண்றுகிறது." - நிலாந்தன்

'இறுதியாக ஹர்த்தால் அறிவிக்கப்பட்டது. இதனை ஏழெட்டுக் கட்சிகள் இணைந்து அறிவித்துள்ளன. இதுவும் புதிதல்ல. வழமையாக இந்தக் கட்சிகள் செய்கின்ற வேலைதான். இதனுடைய பயன் எப்படி அமையும் என்று எல்லோருக்குமே தெரியும்." - கருணாகரன்

'இன்று உழைத்தால் நாளைய கஞ்சி. இன்றைய சம்பளம் நாளைய தீபாவளிக்கு. ஈழத் தமிழர் தாயகத்தின் உழைக்கும் தொழிலாளர் 3 இலட்சம் தமிழரின் நிலை. பொது முடக்கத்துக்கு விடுத்த அழைப்பை மீளப் பெறவேண்டும்" - மறவன்புலவு சச்சிதானந்தம்

'தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் அறவழி போராட்டங்களால் இலங்கை அரசை இறங்கிவரச் செய்ய முடியவில்லை - முடியாதென்னும் அனுபவத்திலிருந்துதான் தமிழ் ஆயுதப் போராட்டம் உயிர் பெற்றது. இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், அறவழிப் போராட்டம் ஏற்கனவே தோல்வியுற்ற ஒன்று. எனவே, மீண்டும் அவ்வாறான வடிவங்களில் இலங்கை அரசை இறங்கிவரச் செய்யலாமென்று எண்ணுவதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?" - ஈழநாடு ஆசிரியத் தலையங்கம்

'மக்களை வீதிக்கு இறக்கிப் போராடச் செய்ய தாங்கள் லாயக்கற்றவர்கள் என்ற உண்மை அம்பலமானதும், அதை மூடிமறைக்க, மக்களை வீடுகளுக்குள் இருத்திப் போராட - தங்கள் வேட்டி கசங்காமல் போராட்டம் நடத்த - அவர்கள் காய் நகர்த்துகின்றார்கள்". - ந. வித்தியாதரன்

தமிழ் கட்சிகள் அறிவித்துள்ள கதவடைப்பு போராட்டம் தொடர்பில் பலதரப்பட்டவர்களாலும் வெளியிடப்பட்ட கருத்துகளில் ஒரு சில உதாரணங்களே மேலேயுள்ளவை.

நீதிபதிக்கு இழைக்கப்பட்டது அநீதி என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஆனால் அதற்காக பல்வேறு வழிகளிலும் ஏற்கனவே போராடியாகிவிட்டது. நீதிபதிக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று நாம் போராடுகின்றோமா அல்லது இனியும் இப்படி வேறு எந்த நீதிபதிக்கும் நடக்கக்கூடாது என்பதற்காக போராடுகின்றோமா என்பது தெரியவில்லை. ஏனெனில் பாதிக்கப்பட்ட நீதிபதி இந்த உலகத்தில் எங்கு இருக்கிறார் என்பதுவே இன்றுவரை யாருக்கும் தெரியாது.

அல்லது, ஏற்கெனவே நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்கள் போதாதென்று, இனியொரு கதவடைப்பு நடத்தினால்தான் அந்த நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதியை சர்வதேசம் தெரிந்துகொள்ளும் என்பதற்காக இந்த கதவடைப்பு போராட்டத்தை எமது தலைவர்கள் நடாத்துகின்றார்களோ என்பதும் தெரியவில்லை. அப்படியெனில், இதுவரை நடத்தப்பட்ட போராட்டங்கள் எல்லாம் பயனற்றவை என்கிறார்களா அவர்கள்?

பலஸ்தீனத்தின் காசாவில் நடக்கும் கொடுமைகள் நாம் அறியாததல்ல. ஆனால், இன்று உலகம் முழுவதையும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கும் அந்த யுத்தம் அப்பாவிகளை இலக்குவைத்து நடத்தப்படுகின்றது. அங்கு நடக்கும் கொடுமைகளை சித்தரிக்கும் புகைப்படம் ஒன்று, இன்று உலகம் எங்கும் வாழும் மனிதநேயம்மிக்க மக்களை கண்ணீர் விட வைத்திருக்கின்றது. கட்டட இடிபாடுகளுக்கு ஊடாக, குண்டு வீச்சுகள் மத்தியில் பயத்துடன் ஒரு சிறிய குழந்தை தனது வீட்டிலிருந்து அழுதபடி ஓடுகின்ற அந்த காட்சி, அந்தப் புகைப்படத்தைப் பார்ப்பவர்களைக் கண்கலங்க வைக்கின்றது. உயிரைக் காக்க ஓடும் அந்தக் குழந்தை, கையில் கிடைத்த தனது பாடப்புத்தகங்களை மட்டும் அள்ளி எடுத்துக்கொண்டு ஓடுகின்ற அந்த காட்சி வாழ்வின் ஆழமான அர்த்தத்தைச் சொல்லி நிற்கிறது.

ஆனால், நமது பிள்ளைகளின் கல்வி பற்றிய எந்த பிரக்ஞையுமின்றிப் எமது தலைவர்கள் போராட்டங்களை அறிவிக்கின்றார்கள். பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகள் நடக்கின்றன. நவராத்திரி காலப் போட்டிகளும் கலை நிகழ்வுகளும் நடக்கின்றன. நவராத்திரி கால பாடசாலைப் பூஜை வழிபாடுகள் அறநெறிகளை எமது மாணவர்களுக்குப் போதிக்கின்றன. ஆனால், இவை தொடர்பில் எமது தலைவர்களுக்கு ஏதும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

'பாடசாலைகளை இப்படி மூடுவது நமது பிள்ளைகளின் கல்வியை அல்லவா பாதிக்கின்றது", என்று மூத்தவரான ஒரு கட்சித் தலைவரிடம் கேட்டபோது, அவர் திரும்ப கேட்டார், 'ஒரு நாள் பாடசாலை போகாவிட்டால் கல்வி என்ன பாதிக்கவா போகின்றது?" என்று.

ஒரு நாள் பாடசாலை போகாவிட்டால் அதனால் கல்வியே பாதிக்காதபோது, இந்த கதவடைப்பை ஒருநாள் நடத்துவதன் மூலம் என்ன பயனை நீங்கள் ஏற்படுத்துவீர்கள் என்று திரும்ப அவரிடம் கேட்டால் அவர்களிடம் பதில் இருக்குமோ தெரியவில்லை.

ஒரு படி மேலே போய் அவர் சொன்னார், "இதுபோன்ற போராட்டங்கள் வேண்டாம் என்று மக்கள் சொல்லட்டும் நாம் விட்டுவிடுகிறோம்" என்று. "அதைத்தானே மக்கள் உங்கள் மனித சங்கிலிப் போராட்டத்தின்போதே சொல்லிவிட்டார்களே" என்றேன். அதற்கு அவரிடம் பதில் இல்லை. 'அப்போ எப்படி போராடுவது என்றாவது சொல்லுங்கள்?" என்றார்.

அப்போதுதான், ஒரு நண்பர் அண்மையில் தெரிவித்த கருத்து எனக்கு நினைவுக்கு வந்தது. "மக்களின் பிரச்னைகளை எல்லாம் தாம் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்துப் பொறுப்பேற்று, மக்களிடம் வாக்குகள் வாங்கி பாராளுமன்றம் செல்லும் இந்த அரசியல்வாதிகள், பின்னர் இவ்வாறான போராட்டங்களை அறிவித்து மக்களைக் கஷ்டப்படுத்துவதன் மூலம், தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பை மீண்டும் மக்களின் தலைகள் மீதே சுமத்திவிட்டுத் தப்பிவிட முயல்கின்றார்கள்" என்றார் அந்த நண்பர்.

எப்படிப் போராடுவது என்று கேட்ட தமிழ் தலைவரிடம் நான் சொன்னேன், "நீங்களே தலைவர்கள், தலைவர்களே வழிகாட்டுங்கள். நீங்கள் கேட்பதால் ஒர் ஆலோசனை தருகின்றேன், நல்லூரில் ஒரு நாள் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை ஒரு சொட்டு தண்ணீரும்கூட குடிக்காமல் இருந்து, உணவுத் தவிர்ப்பு போராட்டம் நீங்கள் எல்லோரும் நடத்துங்கள். நாங்களும் உங்களோடு வந்து அமர்கின்றோம். எத்தனை ஆயிரம் மக்கள் உங்கள் பின்னால் திரள்கிறார்கள் என்பதை அப்போது பாருங்கள்." என்று.

அவரிடம் பதில் இல்லை. தமது இனத்திற்காகத் தம்மையே அர்ப்பணித்துப் போராடிய பெரும் தலைவர்களைக் கண்ட இனம் எங்களுடையது. ஆனால், அப்படி தம்மை வருத்திப்போராட இன்றைய எமது தலைவர்கள் தயாரில்லை. அதற்காக அதுபோன்ற உணவுத் தவிர்ப்புப் போராட்டங்கள் பயனைத்தரும் என்று நாம் சொல்ல வரப்போவதில்லை. ஆனால், தலைவர்கள் என்போரை பார்த்து நாமும் போராடவேண்டும் என்ற சிந்தனை யாவது எமக்கு வருமல்லவா? இன்றைய தலைவர்களைப் பார்த்தால் போராட்டச் சிந்தனையா எமக்கு வருகின்றது?!

**-ஊர்க்குருவி.**

# இலங்கையில் இணையவழி பாதுகாப்புக்கு புதிய சட்டம்

கொழும்பு, ஒக். 18

உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் பிரஜைகளின் உரிமையை உறுதிப்படுத்தி இலங்கையை உலகின் தலைசிறந்த நிலைக்கு உயர்த்த தற்போதைய அரசாங்கம் செயல்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சகலருக்கும் சமூக ஊடக சுதந்திரம் இருந்தாலும், பிறரை அவமதிக்கும் அல்லது பழிவாங்கும் எண்ணத்தில் அதனை பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் விதிகள் கொண்டு வரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், கலந்துகொண்டு அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இணையத்தளத்தின் ஊடாக அவதூறான மற்றும் போலியான தகவல்களை வழங்குபவர்கள் நீதித்துறை மூலமே தண்டிக்கப்படுவார்கள்.

அதேவேளை அவ்வாறானவர்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படமாட்டாது.

சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக மேம்பாட்டு அதிகார சபைச் சட்டம் அந்த நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

அதனைப் போன்று இலங்கையிலும் இணையவழி பாதுகாப்பிற்காக புதிய சட்டம் கொண்டுவரப்படும்-என்றார்.

(அ)

# ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஒக். 18

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் சங்கீத பூஷணம் 'பூத்த கொடி' புகழ் செ. குமாரசாமி அரங்கில் நடைபெற உள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவபாலன் குணபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். துணுக்காய் வலய அழகியல் கல்வி உதவி கல்வி பணிப்பாளர் நாகரட்ணம் இராஜன் சிறப்பு விருந்தினராகவும் பூகரம் அறக்கட்டளை பொ. பிரசாந்தன் குடத்தனை அ. த. க. பாடசாலை ஆசிரியை பாரத் வீணாவாஹினி வேலுப்பிள்ளை அறக்கட்டளையைச் சேர்ந்த வே. கஜேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்ற காப்பாளர் விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரும் அரங்கத் திறப்புரையை சங்கீத பூஷணம் கே. எஸ். சிவஞானராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் நடனம், வில்லிசை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன.

(ஐ)

# மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களின் பாதுகாப்பு குறித்த வழிகாட்டல் விரைவில்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 18

மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமொன்றை வெளியிடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும், சிவில் சமூக செயல்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் கொழும்பில் நடந்தது.

இதில், நாட்டின் ஜனநாயக மற்றும் சிவில் இடைவெளிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் அவர்களது பணியுடன் தொடர்புபட்ட வகையில் அடக்குமுறைகளுக்கும் மீறல்களுக்கும் உட்படுத்தப்படல், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் விசேட தேவையுடையோர் முகங்கொடுத்துவரும் சவால்கள் உள்ளடங்கலாக அண்மைய கால அச்சுறுத்தல் நிலவரம் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அதேபோன்று இவ்விடயங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் மிகநெருக்கமாகப் பணியாற்றுவதற்கு தாம் கொண்டிருக்கும் ஆர்வம் குறித்தும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

மேலும் கடந்தகால அறிக்கைகள் உள்ளிட்ட தகவல்களின் செயற்திறனான வெளிப்படுத்தல்களின் அவசியத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் வலியுறுத்திய சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கும் செயன்முறை மற்றும் அவசர தொலைபேசி சேவை என்பன வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினர்.

இவற்றுக்கு பதிலளித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும் வெளியிட தாம் திட்டமிட்டுள்ளதாகவும், அவை தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் நடத்தப்படும் - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
14.10.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நல்லிணக்கம் ஒரு கற்பனை

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரத்தில் விரைந்து தீர்வை காணுமாறும் - வெளியிடங்களிலுள்ள விவசாயிகளுக்கு வேறு இடங்களை வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்திரவிட்டிருந்தார். அவரின் உத்தரவு வெளியான மறுதினமே - ரணிலின் உறுதிமொழியை பரிகசிக்கும் வகையில் அப்பகுதியை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவரின் தனது அடாவடித்தனத்தை காண்பித்திருக்கின்றார். குறித்த பௌத்த பிக்கு இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அப்பகுதிலுள்ள தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டிருக்கின்றார். ஆனால், அவருக்கு எதிராக இதுவரையில் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்க சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார் ஆனால், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. பௌத்த மதத்தை எவரும் எதிர்க்கவில்லை - மாறாக, ஆக்கிரமிப்புக்கு பௌத்தம் பயன்படுத்தப்படுவதையே தமிழர்கள் எதிர்க்கின்றனர். இதனைப் புரிந்து கொண்டு சிங்கள ஆட்சியாளர்கள் செயலாற்ற வேண்டும். ஆனால், இதுவரையில் அவ்வாறான செயல்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்த வரலாறில்லை.

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரத்தில் சாதாரண சிங்கள மக்கள் தன்னிச்சையாக பங்குகொள்ளவில்லை. ஒரு தூண்டுதலின் அடிப்படையில்தான் அவர்கள் அப்பகுதிக்குள் நுழைந்தனர். இந்த விடயத்துக்குப் பின்னால், கோட்டாபய ராஜபக்சவால் அதிகாரத்துக்கு கொண்டுவரப்பட்ட முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் இருந்தார் என்பது இரகசியமானதல்ல. மிகவும் திட்டமிட்ட சிங்கள இனவாத நிகழ்ச்சிநிரலுடன், அதிகாரத்தைப் பயன்படுத்தி குறித்த ஆளுநர், கிழக்கில் இனமுரண்பாடுகளை தீவிரப்படுத்தும் வகையிலேயே செயல்பட்டிருந்தார். அவரால் இடப்பட்ட அடித்தளத்தில்தான் சில பௌத்த பிக்குகளும் செயல்பட்டு வருகின்றனர்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் நல்லிணக்கம் தொடர்பில் பேசி வருகின்றனர். தென்னாபிரிக்க மாதிரியின் அடிப்படையில் உண்மைக்கும் நீதிக்குமான ஆணைக்குழுவை நியமிக்கப் போவதாகவும் கதை சொல்லிவருகின்றனர். ஆனால், நல்லிணக்கத்திற்கான புறச்சூழலை ஏற்படுத்துவதில் ஒரு சிறியளவு முன்னேற்றத்தைக்கூட இதுவரையில் காண்பித்ததில்லை.

நல்லிணக்கத்தின் அடிப்படை தமிழ் மக்கள் பெரும்பான்மை சிங்களவர்களால் மற்றைய துஷ்பிரயோகத்துக்கு ஆளாக முடியாத சூழல் இருக்க வேண்டும். அந்த நிலைமையை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறானதொரு சூழலை ஏற்படுத்தாமல், தென்னாபிரிக்காவிடம் ஆலோசனையை பெறப் போவதாக கூறுவது நகைப்புக்கிடமானது. தென்னாபிரிக்காவில் யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியடைந்தவர்களை மதித்தனர். அந்த மதிப்புத்தான், அவர்களது நல்லிணக்க முயற்சியில் அத்திபாரமாக இருந்தது.

ஆனால் இங்கோ, யுத்தத்தில் தோல்வியடைந்த மக்கள் அவமதிக்கப்படுகின்றனர். மட்டக்களப்பில் குறித்த பௌத்த பிக்கு தமிழ் மக்களை நோக்கி பேசும் வார்த்தைகள் இந்த நாட்டில் தமிழ் மக்கள் எந்தளவுக்கு இரண்டாம்தரமாக நடத்தப்படுகின்றனர் என்பதற்கு ஒரு வலுவான சான்றாக இருக்கின்றது. ஆனால், அந்த பௌத்த பிக்குவுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனர். இவ்வாறானதொரு சூழலில் தென்னாபிரிக்காவின் ஆலோசனையின் பெறுமதி என்ன? உண்மையில் நல்லிணக்கம் என்பது இலங்கையின் அரசியல் சூழலில் ஒரு கற்பனை மட்டுமே. அதிலும் அது ஒரு தென்னிலங்கை கற்பனை மட்டும்தான்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தெரிவுக்குழு நியமிக்குமாறு பிரேரணை

*கொழும்பு, ஒக். 18*

*2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் சேனல் 4 வெளியிட்ட ஆவணப்படம் மூலம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.*

*கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொடவினால் இந்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.*

*ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பல் வேறு குழுக்களின் விசாரணைகளின் பின்னரும் இந்த சம்பவம் தொடர்பில் பல் வேறு தரப்பினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதாக 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*இதன்படி, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் விதிமுறைகளுக்கு அமைய 11 பேர் கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சபாநாயகரினால் நியமிக்கப்பட வேண்டுமெனவும் முன்மொழியப்பட்டுள்ளது.*

*எந்தவொரு நபரையும் குழுவின் முன் முன்னிலையாகுமாறு அழைப்பதற்கும், எந்தவொரு நபர் மற்றும் ஆவணம் அல்லது பதிவேட்டினை பெறுவதற்கும் அத்தகைய ஆதாரங்களை எழுத்துப்பூர்வமாக அல்லது வாய்மூலமாக பெறுவதற்கும் குறித்த குழுவிற்கு அனுமதி வழங்கும் வகையில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை முழுமையாக பரிசீலிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*இதன்படி, குறித்த விசேட குழுவின் முதலாவது கூட்டத்தில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் அல்லது பாராளுமன்றம் வழங்கக்கூடிய காலப்பகுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ)*

# மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரச எம். பிக்களுக்கு விருப்பம் இல்லை

*கொழும்பு, ஒக். 18*

*மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விருப்பம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.*

*கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும்போது மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும் என குறிப்பிட்டார்.*

*சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின், நாட்டில் ஏனைய பொருட்ஷகளின் விலையும் அதிகரிக்கக் கூடும்.*

*இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். எனவே, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். (அ)*

# கசிப்பு கோட்டை கிளிநொச்சியில் சிக்கியது!

*கிளிநொச்சி, ஒக். 18*

*கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுடலைக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.*


*இதன்போது, 18,750 லீற்றர் கோடாவும், 80 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்தைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.*

*கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்ஷகள் பொலிஸாரை கண்டவுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.*



*தப்பிச்சென்ற சந்தேகநபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் இராமநாதபுரம் பொலிஸார் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகவும், இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

ஒக்ரோபர் - 18 புதன்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சூன்ய




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் வந்து போகும்.

**இடபம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**கடகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். கலைப்பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரம் செழிக்கும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. பனிப்போர் வந்து நீங்கும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**கும்பம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

# சந்தோஷின் யாழ். இசை நிகழ்ச்சியின் எதிர்ப்பின் பின்னணியில் சீனாவாம்!

## செய்தி வெளியிட்டது தினமலர் நாளிதழ்

*சென்னை, ஒக். 18*

*யாழ்ப்பாணத்தில் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்ததன் பின்னணியில் சீனா உள்ளது என்று சந்தேகம் எழுந்துள்ளதாக தமிழ் நாட்டின் பிரபல நாளிதழான தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது.*

*யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி தமிழ் திரைப்பட இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நடத்தவுள்ள இசை நிகழ்ச்சி நடத்தவிருந்தார். இந்த இசை நிகழ்ச்சி யாழ். போதனா மருத்துவமனையில் இந்திய இராணுவம் நடத்திய படுகொலை நினைவுநாள் என்பதால் அதன் திகதியை மாற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்தது.*

*இந்த நிலையிலேயே தினமலர் நாளிதழ் வெளியிட்ட செய்தியில் இந்தக் குற்றச்சாட்டு வெளியிடப்பட்டது.*

*மேலும் அந்த செய்தியில் இலங்கை அதிகாரிகளை மேற்கோள்காட்டி, “கடந்த 1987இல் நடந்த ஒரு சம்பவத்தை மேற்கோள் காட்டி, இசை நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதன் பின்னணியில், அரசியல் சூழ்ச்சி உள்ளது. இலங்கையில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள் உருவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தான், இசை நிகழ்ச்சியை எதிர்க்கின்றனர். மேலும், அவர்கள் சீனாவுக்கு ஆதரவான மன நிலையிலும் உள்ளனர். அது, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு.*

*எதிர்காலத்தில் இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழகத்துக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடும். எனவே, இலங்கை அரசு வாயிலாக, இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுத்து, மீள் உருவாக்கத்துக்கு தடை ஏற்படுத்துவதோடு, சீனா ஆதரவு பிடியில், இலங்கை தமிழர்கள் முழுவதுமாக சென்று விடாமல் பாதுகாக்க வேண்டும். சாதாரண இசை நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதன் வாயிலாக சீனாவின் ஆதிக்கம் தமிழர்கள் மத்தியிலும் ஊடுருவி உள்ளதை காண முடிகிறது”, என்று குறிப்பிட்டுள்ளது.*

*(ஐ)*

# இராமேஸ்வரம் மீனவர்கள் கைது கண்டித்து இன்று போராட்டம்!

*இராமேஸ்வரம், ஒக். 18*

*தமிழக மீனவர்களின் கைதை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இன்றைய தினம் அவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தையும் நடத்தவுள்ளனர்.*

*இராமேஸ்வரத்தில் இருந்து கடலுக்கு சென்று கச்சதீவு பகுதியில்மீன்பிடித்து கொண்டிருந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது. இதேபோன்று, மேலும் 15 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*இந்நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகுகளை விடுவிக்க வலியுறுத்தி தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் இன்று புதன்கிழமை பாம்பன் பாலத்தில் மறியல் போராட்டம் நடத்துவதாகவும் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் அறிவித்தனர். இதன்படி நேற்றுமுன்தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர்.*

*இதனால், சுமார் 800இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் ஆழமற்றபகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.*

*(ஐ)*

# இலங்கை அரசை கண்டித்து தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம்

## விரைவில் நடக்கும் என்கிறது காங்கிரஸ்



*சென்னை, ஒக். 17*

*இலங்கை அரசின் தமிழக மீனவர்கள் விரோத போக்கை கண்டித்து தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் சார்பில் சென்னையில் உள்ள இலங்கை அரசின் தூதரக பணிமனை முன்பு விரைவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே. எஸ். அழகிரி கூறியுள்ளார்.*

*இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,*

*தமிழக மீனவர்கள் விசைப் படகுகளில் பாக்கு நீரிணைபகுதியில் மீன்பிடிக்க சென்ற போது 27 பேர் கைது செய்யப்பட்டனர்.*

*கடந்த சில ஆண்டுகளாகவே தமிழக மீனவர்கள் சர்வதேச கடல் எல்லை பகுதியை மீறி இலங்கை கடல் எல்லைக்குள் மீன் பிடித்ததாக கூறி கைது செய்யப்படுவதும், மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாக நடந்து வருகின்றன. கடற்பகுதியில் மீன்பிடிக்கச் செல்கிற தமிழக மீனவர்கள் இரவு நேரங்களில் சர்வதேச கடல் எல்லை எங்கே இருக்கிறது என்பதை சரியாக கணிக்க முடியாத காரணத்தால் தவறுதலாக எல்லையை தாண்டி செல்கிற நிலை ஏற்படுகிறது. இரு நாடுகளின் கடல் பகுதியில் எல்லைகளை வகுக்கலாமே தவிர, மீன்பிடிக்க செல்கிற மீனவர்களை எல்லையை தாண்டுவதாக காரணம் கூறி இலங்கை இராணுவம் கைது செய்வது மனிதாபிமானமற்றது. மிகமிக கொடூரமானது.*

*கடல் தாமரை மாநாடு நடத்திய பா. ஜ. கவினர் தமிழக மீனவர்களின் நலனை புறக்கணிக்கிற வகையில் அலட்சியப் போக்குடன் செயல்பட்டு வருவதை வன்மையாக கண்டிக்கிறேன். உடனடியாக பிரதமர் மோடி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தி கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் அனைவரையும் விடுவிப்பதோடு, பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை உடனடியாக மீனவர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*கடந்த சில ஆண்டுகளாகவே தமிழக மீனவர்கள் கடல் பகுதியில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு கடும் துன்பத்துக்கு ஆளாகி, வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை அரசின் தமிழக மீனவர்கள் விரோத போக்கை கண்டித்து தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் சார்பில் சென்னையில் உள்ள இலங்கை அரசின் தூதரக அலுவலகத்தின் முன்பு விரைவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றுள்ளது.*

*(ஐ)*

# ரூபா 42 இலட்சம் பண மோசடி; இராணுவ மேஜர் தலைமறைவு

## மனைவி பொலிஸாரால் கைது!

**கொழும்பு, ஒக். 18**

**அமெரிக்காவுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி இராணுவ மேஜரும், மனைவியும் சுமார் 42 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாகவும், மனைவியை கைது செய் துள்ளதாகவும் பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

**பாணந்துறை கோரகன கிராமத்தைச் சேர்ந்த 46 வயதுடைய பெண்ணொருவரே இவ் வாறு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.**

இராணுவ மேஜரை கைது செய்ய பொலிஸார் விசாரணகளை நடத்தி வருகின்றனர்.

சந்தேகத்திற்குரிய மேஜர் யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாழில் உள்ள முகாமில் பணிபுரிவதாக தகவல் கிடைத்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாணந்துறை வடக்கு பொலிஸாருக்கு 5 முறைப்பாடுகள் மற்றும் தெஹிவளை, கல்கிசை உள்ளிட்ட பல பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய பெண்ணின் வீட்டில் ஐந்து கடவுச்சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 42 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட் டுள்ளதாகவும் சந்தேகநபரான பெண்ணின் கணவரான மேஜரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் பாணந்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

(அ)

# சீன அரசு எடுத்த முடிவால் இலங்கை அரசு ஆச்சரியம்!



கொழும்பு, ஒக். 18

கடன் மறுசீரமைப்புக்கு சீனாவின் எக்சிம் வங்கி இணங்கியமை மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த உச்சி மாநாட்டுடன் இணைந்து மொரோக்கோவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் மீட்சியடைவதன் காரணமாக, ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் நிலையான நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக பிச் ரேட்டிங் இன்ரிரியூட் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்நாட்டிலுள்ள ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் அபாய நிலையிலிருந்து விடுபட்டுள்ளதாகவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகவும் அது கூறியுள்ளது. (அ)

# ரணிலுக்கு சீனாவில் சிறப்பான வரவேற்பு!



கொழும்பு, ஒக். 18

பெல்ட் என்ட் ரோட் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீனாவில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது.

ஜனாதிபதி ரணில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கையும் சந்தித்து முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

130 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் 30 உலகளாவிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

“பொது வளர்ச்சி மற்றும் செழுமை” என்ற கருப்பொருளில் குறித்த மாநாடு இம்முறை இடம்பெறுகின்றது.

நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன அரசாங்கத்துடன் தனது விஜயத்தின் போது பேச்சுவார்த்தை நடத்தவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி எதிர்வரும் 20ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருந்து பல முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# தொழுநோயாளர்களில் 10 வீதமானோர் சிறுவர்

## தொழுநோய் தடுப்புப் பிரிவு

கொழும்பு, ஒக். 18

நாட்டில் தொழுநோயாளர்களில் 10 வீதமானோர் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித் துள்ளது.

சிறந்த முறையில் தொழுநோயைக் கட்டுப்படுத்தும் நாடொன்றில், சிறுவர் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை 4 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட வேண்டும் என அந்த பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் 1155 தொழுநோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

(அ)

# யாழில் சொல்வேந்தரின் உரை: நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பு







யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள அறிவு திருக்கோவிலில் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த சொல்வேந்தர் சுகி. சிவம் ஆற்றிய சிறப்பு சிந்தனை உரை நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4:15 மணிக்கு யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவு திருக்கோவில் தலைவர் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சின்னத்துரை முருகானந்தவேல் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரம், தமிழ்நாட்டில் இருந்து சிறப்பு விருந்தினராக வருகை தந்த தமிழ் கூறும் நல்லுலகின் தலைசிறந்த சிந்தனையாளரும் சொல்வேந்தருமான கலைமாமணி சுகி.சிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அறிவுலக சங்கம நிகழ்வினை யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவலர் அருள்நிதி பொ.ஜமுனா தேவி தொகுத்து வழங்க, இறை வணக்கத்தினையும் குரு வணக்கத்தினையும் யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவலரும் துணைப் பேராசிரியருமான அருள்நிதி க.ஜெயராணி, தவ உரையினை பொறுப்பாசிரியரும் துணைப் பேராசிரியருமான அருள்நிதி நா.ஜெயகிருஷ்ணன், வரவேற்புரையிரையினை யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளையின் செயலாளரும் மனவளக்கலை பேராசிரியருமான அருள்நிதி வே.பாஸ்கரன், வாழ்த்துரையினை யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளையின் துணைத்தலைவரும் யாழ். மண்டலத்தின் தலைவருமான துணைப் பேராசிரியர் அருள்நிதி த.குழந்தைவேல், தலைமையுரையினை யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளை மற்றும் யாழ். அறிவு திருக்கோவிலின் தலைவரும் மனவளக்கலை பேராசிரியருமான அருள்நிதி சின்னத்துரை முருகானந்தவேல், சிறப்புரையினை ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி அலகின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன், ‘மனவளக்கலை ஓர் அறிமுகம்’ எனும் தலைப்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி செ.ராம்குமாரி, பிரதம விருந்தினர் உரையினை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாத சுந்தரம் ஆகியோர் ஆற்றினர்.

சிறப்பு சிந்தனை உரையினை ‘மன சக்தியும் மன அமைதியும்’ எனும் தலைப்பில் சொல்வேந்தர் சுகி.சிவம் ஆற்றினார். அன்றாட வாழ்வில் நடைபெறும் சம்பவங்களை உதாரணம்காட்டி - இயல்பாகவும் நகைச்சுவையாகவும் பலரையும் சிந்திக்க தூண்டும் வகையிலும் அவரின் உரை அமைந்திருந்தது.

உரை நிறைவுற்றதும் சொல்வேந்தர் சுகி. சிவம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரம் ஆகியோருக்கு யாழ். மனவளக்கலை மன்றத்தின் அறக்கட்டளை மற்றும் யாழ். அறிவு திருக்கோவிலின் தலைவரும் மனவளக்கலை பேராசிரியருமான அருள்நிதி சின்னத்துரை முருகானந்தவேல் நினைவுக் கேடயத்தினை பரிசாக வழங்கி கௌரவித்தார். Smart யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் துணைத்தலைவர், துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் ஆற்றிய நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

நெல்லியடியில் உள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி ‘மனமது செம்மைப்பட்டால்’ எனும் தலைப்பிலும் கடந்த 16 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்காக ‘மனிதனும் தெய்வமாகாலாம்’ எனும் தலைப்பிலும் சிறப்பு சிந்தனை உரைகளை சொல்வேந்தர் சுகி. சிவம் ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# அனைத்து பணயக் கைதிகளையும் உடனே விடுதலை செய்யவேண்டும்

## இலங்கை அரசு வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 18

**ஹமாஸின் தாக்குதலின்போது பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**காஸாவில் அதிகரிக்கும் வன்முறைகள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ள இலங்கை பணயக்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனவும் அது கோரியுள்ளது.**

ஹமாஸ் இஸ்ரேலில் பொது மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலை கடுமையாக கண்டிக்கின்றோம். காஸாவுக்கு பணயக்கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பிரியங்க விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உணவு, எரிபொருள், மருந்து உட்பட அத்தியாவசிய பொருட்கள் காஸாவுக்கு சுதந்திரமாக செல்ல அனுமதிக்கப்படவேண்டும். இரு தரப்பும் உயிர் இழப்புகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இலங்கை பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் கண்டிக்கின்றது. தங்கள் அரசியல் மற்றும் ஏனைய நோக்கங்களை வன்முறைகள் மூலம் அடைவதற்கு முயல்பவர்கள் உட்பட அனைவரையும் இலங்கை கண்டிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் தீர்மானங்களின் அடிப்படையில் பலஸ்தீன விவகாரங்களுக்கு முழுமையான பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வை காணவேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடு எனவும் அவர் கூறினார். (அ)

# இன்னும் 2 வருடங்கள் ஆட்சியில் நீடிப்பதற்கே இந்த அரசு முயற்சி!

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 18

இன்னமும் இரண்டு வருடங்களுக்கு ஆட்சியில் நீடிப்பதற்கே இந்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை இரத்து செய்வதற்காக ஜனாதிபதி முறைமையையே இல்லாது செய்ய அரசாங்கம் தற்போது முயற்சித்து வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலை இரத்து செய்தால், 2025, ஒகஸ்ட் வரை பொதுத் தேர்தலை நடத்த வேண்டியதில்லை.

அப்படியானால், இன்னமும் இரண்டு வருடங்களுக்கு இந்த அரசாங்கம் ஆட்சியில் நீடிக்கலாம்.

2024 செப்ரெம்பர், ஒக்ரோபரில் இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க மக்கள் காத்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்தத் தேர்தலையே இல்லாது செய்ய அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது-என்றார். (அ)

# மாணவியின் மரணத்தைத் தொடர்ந்து வயம்ப பல்கலையின் 2 பீடங்கள் பூட்டு

கொழும்பு, ஒக். 18

வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த மாகந்துர கால்நடை, மீன்பிடி மற்றும் போஷாக்கு பீடத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் வயிற்றில் ஏற் பட்ட நோயினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

ஒக்ரோபர் 11ஆம் திகதி சந்தலங்காவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், ஒக்ரோபர் 13ஆம் திகதி உயிரிழந்ததாக பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை தர்மபால வீதியில் வசிக்கும் 23 வயதுடைய மாணவியே உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனை அறிக்கை பொலிஸாருக்கு இன்னும் கிடைக்கவில்லை எனவும் அது கிடைத்த பின்னரே மரணத்திற்கான காரணம் தெரியவரும் எனவும் பன்னல காவல்துறையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவரது மரணத்தைத் தொடர்ந்து கால்நடை, மீன்பிடி மற்றும் போஷாக்கு மற்றும் விவசாய மற்றும் தோட்டமுகாமைத்துவ பீடங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை வரை வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்லைன் மூலம் விரிவுரைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# அரிசி இல்லை என்று விவசாயிகள் நாடகம்!

## அமைச்சர் அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஒக். 18

அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து வியாபாரிகளும் விவசாயிகளும் நாடகமாட முயற்சிப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

புத்தளத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுக்கு அரிசி தட்டுப்பாடு இல்லை. இந்த போகத்தில் போதிய அறுவடை கிடைத்துள்ளது என்பது வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் தெரியும். இதை, ஐந்து மாதங்களுக்கு பயன்படுத்த முடியும் என்பதால், விவசாயிகள் வீடுகளில் வைத்துள்ளனர்.

மேலும் ஆலை உரிமையாளர்கள் இவற்றை ஆலைகளில் வைத்துள்ளனர். அதனால்தான் இந்த சிறு பற்றாக்குறை உருவாகிறது. ஆனால் நாட்டுக்குத் தேவையான அரிசியின் அளவு. அதாவது நம் அனைவருக்கும் தேவையான அரிசி இருக்கிறது.

பாஸ்மதியை வெளிநாட்டிலிருந்து கொண்டு வர வேண்டும். கீரி சம்பாருக்கு ஓரளவு தட்டுப்பாடு உள்ளது. மேலும் மற்றைய அரிசி வகைகள் போதுமான அளவு உள்ளன.

மேலும், எவ்வளவு மறைத்தாலும் சாதாரண நிலை அரிசி கட்டுப்பாட்டு விலையை தாண்டி செல்ல அனுமதிக்கமாட்டோம். அது கட்டுப்பாட்டு விலைக்கு கீழே பராமரிக்கப்படும்-என்றார். (அ)

# இஸ்ரேல்- பலஸ்தீனப் போர் தொடர்ந்தால் இலங்கையர்களை மீட்பதற்கு நடவடிக்கை

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 18

இஸ்ரேல்- பலஸ்தீனத்துக்கு இடையேயான யுத்தம் மேலும் வளர்ச்சியடையும் எனின் அவசர கால கட்டத்தில் செயற்படுவதற்கான அடிப்படை திட்டத்தை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தயாரித்துள்ளதாக குறித்த பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.



இதற்கு, வெளியுறவு அமைச்சகத்தின் தூதரகப் பிரிவின் கீழ் உள்ள தூதரகங்கள் உட்பட பல வெளிநாட்டு உறவுகள் துறைகள், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளின் ஆதரவைப் பெற திட்டமிட்டுள்ளதாகவும் துணைப் பொது மேலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தில் வாழும் இலங்கையர்களின் அவசர தேவைகளுக்காக வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் என்பன தற்போது தூதரகங்களுக்கு நிதி வழங்கியுள்ளன.

இதேவேளை, இஸ்ரேலில் வாழும் இலங்கையர்கள் எவரும் இலங்கைக்கு வர வேண்டும் என கோரவில்லை.

இஸ்ரேல் பலஸ்தீன யுத்த மோதல்கள் காரணமாக இலங்கைக்கு வர விரும்பும் இஸ்ரேலில் வாழும் அனைத்து இலங்கையர்களுக்கும் வசதிகளை வழங்குவதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கடந்த வாரம் அறிவித்திருந்த போதிலும், இஸ்ரேல் தூதரகம் அல்லது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இதுவரையில் அவ்வாறான கோரிக்கையை பெற்றுக்கொள்ளவில்லை.

காணாமல் போனதாகக் கூறப்படும் இருவரைத் தவிர, யுத்த மோதல்களில் சிக்கியுள்ள ஏனைய இலங்கையர்கள் தொடர்பில் எவ்வித் தகவலும் இல்லை .

மேற்குக் கரையில் மூன்று இலங்கை குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும் ஆறு இலங்கையர்களும் வசிப்பதாக பாலஸ்தீனத்தில் உள்ள இலங்கைப் பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது-என்றார். (அ)



# நேரத்தை நியாயமாக பகிர்ந்தளிக்கவேண்டும்

## மைத்திரிபால கோரிக்கை

கொழும்பு, ஒக். 18

கேள்வி நேரத்தின் போது சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நேரம் போதாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு ஏழிலிருந்து எட்டு நிமிடங்களே அவகாசம் தருவதாகக் கூறிய முன்னாள் ஜனாதிபதி, நேரத்தை நியாயமாகப் பகிர்ந்தளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதனால் எங்களது எம்.பி.க்கள் கடும் தர்மசங்கடத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# சில இரகசிய கோப்புகள் கோட்டாபயவிடம் உண்டு!

## சபையில் வெளிப்படுத்தினார் மைத்திரி

கொழும்பு, ஒக். 18

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுக்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சில இரகசிய கோப்புகளை வழங்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரொஹான் குணரத்ன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட சில முக்கிய பைல்களை விசாரணைகளுக்காக ஒப்படைக்க முடியாதென ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கைகளை ஒருபோதும் வெளியில் வழங்க முடியாது எனவும் கூறுகிறார்.

நான் நியமித்திருந்த சில ஆணைக்குழுக்களில் தலைவர்கள் தமது விசாரணை அறிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தபோது, அதற்கு மேலதிகமாக சில இரகசிய கோப்புகளையும் கையளித்துள்ளனர். குறித்த இரகசிய கோப்புகளை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கும், பொலிஸாருக்கும் வழங்க வேண்டாமென கூறியே வழங்கியுள்ளனர்.

அந்த கோப்புகளை தனிப்பட்ட ரீதியில் வைத்துக்கொள்ளுமாறும் கோட்டாபயவிடம் கூறியுள்ளனர்.

பாதுகாப்பு ஆலோசகர் பேராசியர் ரொஹான் குணரத்ன, ஒருபுறம் தம்மிடம் உள்ள கோப்புகள் இரகசியமானவை, அவற்றை விசாரணைகளுக்கு கையளிக்க முடியாதென கூறுவதுடன், மறுபுறம் கோட்டாவிடம் இரகசிய கோப்புகளை வழங்கியுள்ளார்.

ஆகவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இது



வரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து விசாரணைகளும் பொய்யானவை என்பதுடன், அவை பக்கச்சார்பானவையாகும். எந்தவொரு விசாரணை அறிக்கையும் முழுமையானவை அல்ல.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டிருந்த ஆவணப்படம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க முற்படுகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தில் கொண்டுள்ள அதே நிலைப்பாட்டையே நானும் கொண்டுள்ளேன்.

இதற்கு முன்னரும் இந்த பாராளுமன்றத்தில் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. என் மீது வைராக்கியம் கொண்டவர்களைதான் அந்த தெரிவுக்குழுவுக்கு நியமித்திருந்தனர். அந்த காலப்பகுதியில் அரசாங்கத்துக்குள் இருந்த முரண்பாடுகள் காரணமாக குறித்த தெரிவுக்குழு தோல்வியடைந்த ஒரு தெரிவுக்குழுவாக இருந்தது.

பாராளுமன்றத்தில் உள்ள கல்வி புலமை கொண்டவர்கள், சிறந்த அனுபவம் கொண்டவர்களை சபாநாயகர் இந்த குழுவுக்கு நியமிக்க வேண்டும். அதற்கு மாத்திரமே நான் இணக்கம் வெளியிடுகிறேன். கட்சிகளுக்கு இந்த குழுவை நியமிக்கும் அதிகாரங்கள் வழங்களை வேண்டாம். என்மீது வைராக்கியம் கொண்டவர்களே கட்சிகளில் அதிகமாக உள்ளனர். ஆகவே, அரசின் பணத்தை வீண் செலவு செய்யாது, சிறந்ததொரு தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும் -என்றார்.

(அ)

# வைரஸ் பரவும் அபாயம் வைத்தியர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 18

சமீபத்திய வானிலை ஏற்ற இறக்கங்களினால், வைரஸ் தொற்று பரவக்கூடிய சாத்தியம் குறித்து மருத்துவ அதிகாரிகள் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

வெப்பநிலையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் மற்றும் காலநிலையில் ஏற்படும் மாற்றமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சிரேஷ்ட ஆலோசகர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம கூறினார்.

பருவகால காய்ச்சல் இல்லையென்றாலும், வைரஸ் தொற்றுகள் பொதுவானவை. ஆனால் மருத்துவ கவனிப்பை புறக்கணிப்பது ஆபத்தான விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்று மருத்துவர் விஜேவிக்ரம எச்சரித்தார்.

எனவே, "தொண்டை புண், இருமல், மூக்கு ஒழுகுதல், காய்ச்சல் மற்றும் வலியுடன் கூடிய காய்ச்சல் போன்ற தொடர்ச்சியான அறிகுறிகளை தனிநபர்கள் அனுபவித்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவது அவசியம்," என்று அவர் வலியுறுத்தினார்.

மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டுதல் இன்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்ளவேண்டாம் என்றும் மருத்துவர் விஜேவிக்ரம மக்களை வலியுறுத்தினார்.

(அ)

# பட்ஜெட்டில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டும்!

## இல்லையேல் ஜனவரி முதல் தொழில் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 18

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். அன்றேல், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கடுமையான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக இலங்கை அரச அதிகாரிகளின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேற்படி கூட்டமைப்பின் தலைவர் சுமித் கொடிகார, கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தற்போது சுமார் 17 இலட்சம் அரச ஊழியர்கள் மிகவும் துரதிஷ்டவசமான தலைவிதியை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது வாழ்க்கைச் சுமை எகிறிவிட்டது. தண்ணீர், மின்சாரம், எரிபொருள், அத்தியாவசிய உணவு, மதிப்பீட்டு கட்டணம் உள்ளிட்ட அனைத்தும் கட்டுப்படியாகாத வகையில் உயர்ந்துள்ளது.

இன்று எமது பிள்ளைகள் தமது கல்வியை ஒழுங்காகச் தொடர முடியாமல் நிர்க்கதியாகியுள்ளனர்.

இனி எங்களால் தாங்க முடியாது. வாழ்க்கைச் செலவு இவ்வளவு உயர்ந்தாலும் எட்டு வருடங்களில் ஐந்து சதம் கூட சம்பள உயர்வு இல்லை.

வரவிருக்கும் பட்ஜெட்டில் குறைந்தபட்சம் ரூ.20,000 சம்பள உயர்வு கிடைக்கும் என்பதே எங்களின் இறுதி நம்பிக்கை. அது நடக்கவில்லை என்றால், ஜனவரி முதல் தொழில்முறை முடிவுகளை எட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்-என்றார்.

(அ)

# ஜானக ரத்நாயக்கவை கொலை செய்வதை தவிர்ப்பதற்கு 15 இலட்சம் ரூபா கப்பமாகக் கோரிய புளுமண்டல் சங்கா!

கொழும்பு, ஒக். 18

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான ஜானக ரத்நாயக்கவை கொலை செய்வதைத் தவிர்ப்பதற்காக திட்டமிட்ட குற்றக் குழு ஒன்று 15 இலட்சம் ரூபாவை கப்பமாக கோரியமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டுபாயில் பதுங்கி வாழும் புளுமண்டல் சங்காவே இந்தக் கப்பத்தை கோரியதாக தெரிய வந்துள்ளது.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை 7.10 மணிக்கும் 9.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் புளூமண்டல் சங்கா என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபர், 'தங்களைக் கொலை செய்வதற்காக 80 இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் ஒன்று தன்னிடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாதிருக்க தனக்கு 15 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது என ஜானக ரத்நாயக்கவிடம் கூறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அழைப்பின் பிரகாரம் முறைப்பாட்டாளரான ஜனக ரத்நாயக்க தனது அலுவலகத்தில் உள்ள பணத்திலிருந்து 15 இலட்சம் ரூபாவை தன்னை அழைத்த நபரிடம் ஒப்படைக்குமாறு பணியாளருக்கு அறிவித்திருந்தார் எனவும் தெரிய வந்துள்ளது.

(அ)

# சுமார் 8 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவு இல்லை!

கொழும்பு, ஒக். 18

அஸ்வெசும சமூக நலத்திட்டத்தின் கீழ் 800,000 குடும்பங்கள் இன்னும் ஜூலை மாதம் தொடர்பான சமுர்த்தி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பெறவில்லை என தெரிய வந்துள்ளது.

அதன்படி ஜூலை மாதம் தொடர்பான முழு கொடுப்பனவுகள் 12 இலட்சம் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளை அடுத்த இரண்டு மாதங்களில் பூர்த்தி செய்ய முடியும் எனவும் நலன்புரி நன்மைகள் சபையின் மேலதிக ஆணையாளர் ரத்னசிறி ராஜபக்ஷ தெரிவித்தார்.

'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பயனாளிகளின் பட்டியலுக்கு எதிராக சுமார் 10 இலட்சம் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை சபை பெற்றுள்ளது.

10 இலட்சம் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளில் 7 இலட்சம் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மீதமுள்ள 3 இலட்சம் மனுக்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாக மேலதிக ஆணையாளர் குறிப்பிட்டார்.

இது தவிர 5 இலட்சம் குடும்பங்களின் வங்கிக் கணக்குகளில் பல்வேறு பிரச்சினைகளால் ஜூலை மாதத்திற்கான சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவுகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இவ்வருடம் டிசெம்பர் மாதத்துக்குள் தற்போதுள்ள பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு, அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் எவ்வித தாமதமும் இன்றி கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

(அ)

# வைத்தியரின் நகை அபகரிப்பு

கொழும்பு, ஒக். 18

காலி கராபிட்டிய பொது வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி ஒன்றை அபகரித்து சென்ற சம்பவமொன்று நேற்று முன் தினம் பதிவாகியுள்ளது.

அபகரிக்கப்பட்ட நகையின் பெறுமதி 140,000 ரூபாய் என குறிப்பிட்ட வைத்தியர் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக காலி பொலிஸார் கூறினர்.

தங்க நகையை அபகரித்து சென்ற நபர் தொடர்பில் தகவல்களை வெளிக்கொண்டு வந்து அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சம்பள உயர்வு வழங்கக் கோரி அரச ஊழியர்கள் போராட்டம்!





திருமலை, ஒக். 18

எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தில் 20000 ரூபா வரை சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டும் என அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன் தினம் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு முன்பாக முன்னெடுத்தது.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் சம்பள அதிகரிப்பை கண்டித்து தங்கள் எதிர்ப்புகளை முன்வைத்துடன், 1000 ரூபா அதிகரிக்கப்படும் என தெரிவித்ததைத் தொடர்ந்து நாளாந்தம் பெற்றோல் அதிகரிப்பு, எரிவாயு, மின்சாரம் போன்ற அதிகரிப்பால் மிகப் பாதிக்கப்படுவது அரச உத்தியோகத்தர்கள்தான். அத்துடன் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கின்றது. அதற்கு ஈடு கொடுக்கும் அளவுக்கு அரச ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படவில்லை.

அதற்கு எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் 20000ரூபா வரை சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் மாத்திரமே அரச ஊழியர்கள் வாழ முடியும். உடனடியாக சம்பளத்தை உயர்த்தவேண்டும் என கோரிக்கை விடுத்தனர். (அ)



# அரசியலில் பாலியல் இலஞ்சம் கோருவோரே அதிகம் உள்ளனர்

திருமலை, ஒக். 18

அரசியலுக்கு கிராமப்புறங்களில் இருந்து வரும் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள் பெண்களை எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பது பற்றி நாங்கள் நன்று அறிந்து உள்ளோம் என தெரிவித்துள்ள சமூக ஆர்வலரான கணபதிபிள்ளை சூரியகுமாரி, அரசியலில் பாலியல் இலஞ்சம் கோருபவர்களே அதிகம் காணப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

பெண்களின் அரசியலுக்கான தடைகளைக் களைந்தறிவோம் என்ற தொனிப்பொருளில் தேசிய ஒற்றுமைக்கான அபிவிருத்தி மன்றத்தினால் வெகுஜன ஊடக ஒத்துழைப்புச் செயல் திட்டம் மற்றும் ஊடக கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள மல்லிகா ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெண்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பதாகவும், பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள்.

வேறு நாடுகளில் பெண்களின் விகிதாசாரம் அதிகளவில் இருக்கிறது. இலங்கையில் 40 இற்கும் மேற்பட்ட விகிதாசாரத்தில் பெண்கள் இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் தேர்தலின் போது பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எப்போதும் பெண்கள் சமையலறையில் இருப்பதை மட்டும் விரும்பவில்லை-என்றார். (அ)



# பாடசாலைக்கு மல்டி மீடியா கருவி

அம்பாறை, ஒக். 18

சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயத்திற்கு றிஸ்லி முஸ்தபா சமூக சேவை அமைப்பின் ஊடாக மல்டி மீடியா கருவி வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு "றிஸ்லி முஸ்தபா சமூக சேவையின் அமைப்பின்" ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும்,முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.எம்.இஸ்மாயில், சாய்ந்தமருது திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீத் ஜவாஹிர் மற்றும் பாடசாலை அதிபர், பிரதியதிபர், உதவி அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இப்பாடசாலையின் வகுப்பறைக்கு ஸ்மார்ட் ரி.வி, மடிக்கணணி என்பன பிரதம அதிதியினால் இதற்கு முன்னர் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கிராமியப் பெண்கள் தினத்தை முன்னிட்டு கிராமிய மகளீரை கௌரவிக்கும் நிகழ்வு!

மட்டக்களப்பு, ஒக். 18




சர்வதேச கிராமியப் பெண்கள் தினத்தினை முன்னிட்டு கிராமிய மகளீரை கௌரவிக்கும் நிகழ்வொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் எம்.எல்.எம். வுஹாரி தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இது மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

"அனைவருக்கும் நல்ல உணவினை பயிரிடும் கிராமியப் பெண்கள்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற நிகழ்வில் பாரம்பரிய கலை, கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் நடாத்தப்பட்டதுடன், ஆர்வத்துடன் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மகளீர் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# விபுலானந்தா மணி மண்டபத்தில் 3ஆவது வருடமாக நவராத்திரி விழா!





காரைதீவு, ஒக். 18

இந்து சமய கலாச்சார திணைக்களமும் காரைதீவு பிரதேச செயலகமும் காரைதீவு விபுலானந்த பணி மன்றமும் இணைந்து மூன்றாவது வருடமாக தொடர்ச்சியாக நடத்துகின்ற நவராத்திரி விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இரண்டாவது நாளாக மணிமண்டபத்தில் நடைபெற்றது .

அங்கு இரண்டாவது நாள் பிரதம அதிதியாக விபுலானந்தா மணி மண்டபஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் ஏற்பாட்டில் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கதாபிரசங்கி நாகராஜா சனாதனன் பணி மன்ற உறுப்பினர்களான சிவராஜா நடராஜா மற்றும் அறநெறி மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

அறநெறி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ச்சியாக 10 தினங்களிலும் இவ்வாறு நிகழ்ச்சிகள் நடைபெறும். (அ)

# மான் கொம்புகளுடன் இரண்டு பேர் கைது!

அம்பாறை, ஒக். 18

இரு மான் கொம்புகள் உள்ளடங்களாக துப்பாக்கி தோட்டாக்களுடன் இரு சந்தேக நபர்களை கைது செய்யப்பட்டதாக அம்பாறை மாவட்ட பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் தமண பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மிருக வேட்டையில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மாவட்ட பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிகளால் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து இரு மான் கொம்புகள், ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் -19, எல்.எம்.ஜி ரக தோட்டாக்கள் -03 , எம் 16 ரக தோட்டாக்கள்-48 உள்ளிட்ட வெடி பொருட்கள் சிலவும் மீட்கப்பட்டன. (அ)

### உக்கிரமடையும் போருக்கு மத்தியில்

# இஸ்ரேலுக்கு பயணிக்கின்றார் அமெ. ஜனாதிபதி ஜோ பைடன்

நியூயோர்க், ஒக். 18

**அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இன்று இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**இஸ்ரேல்-பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பு இடையே போர் சூழல் நிலவி வரும் நிலையில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளதுடன் தனது இரு போர் கப்பல்களை மத்திய தரைக்கடல் பகுதியில் நிலைநிறுத்தியும் உள்ளது.**



இந்நிலையிலேயே, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இன்று இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொள்வதாக வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் கரீன்-ஜீன்-பியர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஜோர்டான் மன்னர் அப்துல்லா, எகிப்திய ஜனாதிபதி அப்தெல் பக்தா எல்-சிசி, பாலஸ்தீனிய மேற்கு கரை ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஆகியோரையும் ஜோ பைடன் சந்திக்கவுள்ளார்.

ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் காசா மீது இஸ்ரேலின் முப்படைகளும் தாக்குதல் நடத்த தயார் நிலையில் உள்ள நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் இஸ்ரேல் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

காசா பகுதியில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி மற்றும் பிராந்திய மோதல்கள் தீவிரமடைந்து வருவதன் காரணமாக இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கிக்கின்றன.

(அ)



## இஸ்ரேலின் விமானத் தாக்குதல்களில் காஸாவில் 71 பேர் கொல்லப்பட்டனர்!

ஜெருசலேம், ஒக். 18

தெற்கு காஸாவில் இஸ்ரேலிய விமானத் தாக்குதல்களில் 71 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தெற்கு காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய ஒரே இரவில் வான்வழித் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 71 ஆக உயர்ந்துள்ளதாக அல் ஜசீரா அரபு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் பலர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரபா மற்றும் கான் யூனிஸ் வீடுகளைத் தாக்கிய குண்டு வெடிப்பின் போது நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல் ஜஸீரா அரபு வெளியிட்ட காணொளியில்,

மருத்துவ உதவிப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டவரை பையில் சுமந்து செல்வதையும், கடுமையாக காயமடைந்த மற்றொரு நோயாளியை ஸ்ட்ரெச்சரில் தெற்கு காஸாவில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதையும் காட்டுகிறது.



## இஸ்ரேலிய டாங்கிகள் மீது ஹிஸ்புல்லா தாக்குதல்!

ஜெருசலேம், ஒக். 18

இஸ்ரேலிய டாங்கிகளை நோக்கி வடக்கு பகுதியில் ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளதாக ஹெஸ்புல்லா அறிவித்துள்ளது.

இந்த தாக்குதலால் உயிர்ச்சேதம் ஏற்பட்டதா என்பது தொடர்பாக எவ்வித தகவலையும் இதுவரை வெளியாகவில்லை.

இதற்கிடையில், லெபனான் எல்லையில் உள்ள நகரமான மெடுலாவில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் வடக்கு எல்லையில் இருந்து 2 கிமீ தொலைவில் உள்ளவர்களை அங்கிருந்து செல்லுமாறு இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டதை அடுத்து, மெட்டுலா இராணுவ வளையமாக அறிவிக்கப்பட்டது.

(அ)

## இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி!

### ஈரான் வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை

தெஹ்ரான், ஒக். 18

காஸா மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹூசைன் அமீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச போர் விதிகளை மீறி பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருவதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் மறைமுகமாக போரில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பிற்கு இடையில் 11 வது நாளாக போர் இடம்பெற்று வருகின்றது.

குறித்த போரில் இதுவரை 4 ஆயிரத்து 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

(அ)

# பிரசல்ஸ் நகரில் சூட்டுச் சம்பவம்!

### இருவர் உயிரிழப்பு
### தீவிரவாதத் தாக்குதல் அறிகுறி
### துப்பாக்கிதாரி தப்பியோட்டம்



பிரசல்ஸ், ஒக். 18

பெல்ஜியம் தலைநகர் பிரெசெல்ஸின் மையப்பகுதியில் இன்று முன்னிரவு ஏழு மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குறைந்தது இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

பிரகாசமான ஒரேஞ் வர்ண ஜக்கெட் அணிந்திருந்த தாக்குதலாளி ஒருவர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டு விட்டு ஸ்கூட்டர் ஒன்றில் ஏறித் தப்பிச் சென்ற காட்சிகள் சம்பவ இடத்தில் பதிவாகி உள்ளன என்று பெல்ஜியம் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு சிவிலியன்கள் உயிரிழந்ததை அரச வழக்கறிஞர் அலுவலகம் உறுதிப்படுத்தி உள்ளது. இருவரும் சுவீடன் நாட்டவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரோ 2024 உதைபந்தாட்டப் போட்டிக்கான தகுதிகாண் ஆட்டத்தில் சுவீடன் நாட்டு அணி விளையாடிக் கொண்டிருந்த சமயத்திலேயே பிரெசெல்ஸ் நகரில் தாக்குதல் நடந்திருக்கிறது. உயிரிழந்த சுவீடிஷ் பிரஜைகள் இருவரும் அந்த ஆட்டத்தைக் காண்பதற்காக வருகை தந்தவர்களா என்பது உறுதியாகத் தெரியவரவில்லை.

நபர் ஒருவர் ஆண்டவனது பெயரில் இந்தத் தாக்குதலைத் தானே நடத்தினார் என்று அரபு மொழியில் கூறுகின்ற வீடியோப் பதிவு ஒன்று சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு ள்ளது. ஆனால் அதில் தோன்றுபவர் கொலையாளிதானா என்பது உறுதிப் படுத்தப்படவில்லை.

மேலதிக விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தாக்குதல் சம்பவத்தை அடுத்துப் பொலீஸார் பிரெசெல்ஸ் நகரைச் சுற்றிப் பாதுகாப்பைப் பலப்படுத்தி உள்ளனர். தாக்குதலாளி தேடப்பட்டு வருகிறார்.

பெல்ஜியம் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர், நகர முதல்வர் ஆகியோர் நெருக்கடிகால மையம் ஒன்றில் சந்தித்துப் பாதுகாப்பு நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

தாக்குதலாளி பிரான்ஸுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக பெல்ஜியம் எல்லையில் சோதனையைத் தீவிரப்படுத்துமாறு பிரான்ஸின் உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டாமன்னா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

(அ)

# 40வீதமான பதின்ம வயதினர் மனநல நோயினால் பாதிப்பு!

## வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா

கொழும்பு, ஒக். 18

**நாட்டில் பதின்ம வயதினரில் 40 சதவீதமானோர் மனநல நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.**

**இதேவேளை, நாட்டில் தற்கொலை செய்துகொள்பவர்களின் எண்ணிக்கையில் அதிகமானோர் பதின்ம வயதினர் என ஆய்வறிக்கையில் வெளியான தகவல்கள் சுட்டிக்காடியுள்ளதாக வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா மேலும் கூறினார்.**

குழந்தை பருவ வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டம் தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தின் போதே தாய் - சேய் குடும்ப சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பதின்ம வயதினரிடையே ஏற்படும் தனிமை , மனக் குழப்பங்கள், மன அழுத்தங்கள், எரிச்சல்கள் மற்றும் கோபங்கள் போன்ற செயற்பாடுகளால் ஏற்படும் மனநல பாதிப்பின் உச்சக்கட்டமே தற்கொலை போன்ற நிலைமைக்கு முக்கிய காரணம்-என்றார். (அ)

# அலி ஸாஹிர் மௌலானா நேற்று எம்.பியாக சத்தியப்பிரமாணம்!



கொழும்பு, ஒக். 18

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான அலி ஸாஹிர் மௌலானா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக நேற்று உறுதியேற்றார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போதே அவர் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்தார்.

அமைச்சர் நசீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதானதை தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# ஐ.தே.கவுக்கு புதிய யாப்பு!

## 77 ஆவது சம்மேளனம் 21 ஆம் திகதி

கொழும்பு, ஒக். 18

ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது விசேட சம்மேளனம் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதன்போது கட்சிக்கான புதிய யாப்பு முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

“நாட்டில் உள்ள சிஸ்டம் மாற வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். போராட்டத்தின்போதும் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய வே கட்சி யாப்பு எதிர்காலத்துக்கு ஏற்றவகையில் மாற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத்தில் 24 ஆயிரம் பேரை பங்கேற்கவைக்க திட்டமிட்டோம். எனினும், சீரற்ற காலநிலையால் பொதுவெளியில் மாநாட்டை நடத்தாமல் இருக்க முடிவெடுக்கப்பட்டது. எனவே, பங்கேற்பவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.” - என்றார். (அ)

# நோயாளி ஒருவர் சுயநினைவுடன் ஓவியம் வரைகையில் மூளையில் சத்திரசிகிச்சை!

## அனுராதபுரம் வைத்தியசாலை மருத்துவர்கள் சாதனை

கொழும்பு, ஒக். 18

நோயாளி சுயநினைவுடன் ஓவியம் வரைந்துகொண்டிருக்கையில் மூளைகட்டியை பிரித்தெடுக்கும் ஒருவகை சத்திரசிகிச்சையை அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திர சிகிச்சை பிரிவின் மருத்துவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

நோயாளி சுயநினைவுடன் உள்ளவேளை மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொண்டனர்.

குறிப்பிட்ட மருத்துவக் குழுவினர் இவ்வாறான மூன்றாவது சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர். முதலாவது சத்திர சிகிச்சையும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையிலேயே இடம்பெற்றது.

நோயாளியின் மூளையின் இடது பக்கத்தில் உள்ள கட்டியை பிரிப்பதற்காக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோது அவர் குறைந்தபட்ச மயக்கநிலையிலேயே காணப்பட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

36 வயது சிற்பக்கலைஞரான நோயாளி சத்திரசிகிச்சை இடம்பெற்றவேளை ஓவியம் வரைந்துள்ளார்.

பேச்சு மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்தும் அவரது மூளையின் ஒரு பகுதியை தவிர்ப்பதற்காக அவரை ஓவியம் வரையுமாறு வைத்தியர்கள் கேட்டுள்ளனர்.

நொச்சியாகமவை சேர்ந்த இந்த நோயாளி சத்திரசிகிச்சையின் பின்னர், எந்த வித பாதிப்பும் இல்லாமல் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார். (அ)

# மக்களின் முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்க தவறிய 9 பொலிஸார் பணி இடைநீக்கம்!

## 19 பேருக்கு எச்சரிக்கை கடிதம்

கொழும்பு, ஒக். 18

பொலிஸ் நிலையங்களில் மக்களிடம் இருந்து பெறப்படும் முறைப்பாடுகள் தொடர்பில், பொலிஸ் தலைமையக சுற்றறிக்கை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படாத 9 பொலிஸ் உத்தியோகத்தர்களை பணி இடைநீக்கம் செய்யவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பானவர்களும் உள்ளடங்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேற்கொண்ட விசாரணையில், இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத 125 சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் 84 விசாரணைகளை நிறைவு செய்த விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், 61 பேர் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 19 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 41 சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முனனெடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகள்!

கொழும்பு, ஒக். 18

கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலையில் ராகம பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு ஆறு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிறந்துள்ளன.

குறித்த ஆறு குழந்தைகளும் ஆண் குழந்தைகள் என வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தண்டநாராயணா உறுதிப்படுத்தினர்.

இலங்கையில் ஒரே பிரசவத்தில் ஆறு ஆண் குழந்தைகள் பிறந்துள்ளது இதுவே முதல் முறை ஆகும்.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி முதன் முறையாக ஒரே பிரசவத்தில் பிறந்த 6 குழந்தைகள் பிறந்தன. அதில் மூன்று ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மலையக தமிழர்களுக்கு தேவை அனுதாபம் அல்ல, உரிமைதான்!

## அநுரவின் கருத்து முற்போக்கானது என்கிறார் மனோ

கொழும்பு, ஒக். 18

“மலையக தமிழருக்கு தேவை அனுதாபமல்ல, நியாயம்.!” (உரிமைகள்) என்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் கூற்று முற்போக்கானது.” - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மலையகம் 200 ஐ முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியால் ஹற்றன் பிரகடனம் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க,

“மலையக தமிழர்களுக்கு தேவை அனுதாபம் அல்ல, சுயமரியாதையுடன் வாழ்க்கூடிய சமஉரிமையாகும். அம்மக்களுக்கு வரலாற்றில் இழைக்கப்பட்டுள்ள அநீதியை நாம் நிச்சயம் சரிசெய்வோம்.” - கூறியிருந்தார்.

இந்நிலையிலேயே இதனை மனோ கணேசன் வரவேற்றுள்ளார். (அ)

## தமிழர்களின்...

உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நானும் ஒரு விடுதலைப் போராளி என்ற வகையிலே எமது மக்களின் மனநிலையில் இருந்து கூறுகின்றேன் உண்மையிலேயே தமிழீழக் கனவு தனிநாட்டுக் கனவு என்பது இன்னும் எமது மக்கள் மத்தியில் இருந்து இல்லாமல் செல்வதற்கு, அழிவதற்கு உங்களைப் போன்ற ஒரு சில அமைச்சர்கள் விரும்பவில்லை என்பதைத் தான் நான் கூறுகின்றேன.

இதனையே வடக்கு-கிழக்கில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் கட்டியம் கூறுகின்றன. இன்று வடக்கில் இருந்து கிழக்கு வரை தையிட்டி விகாரை, வெடுக்குநாறிமலை விகாரை, குருந்தூர் மலை விகாரை, திருகோணலையில் பல விகாரைகள், அம்பாறையில் தமிழர் பிரதேசங்களில் பல விகாரைகள் என அமைக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலே பண்ணையாளர்கள் ஒரு மாத காலத்துக்கும் மேலாக தொடர்ச்சியான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

தங்கள் மாடுகளை மேய்ப்பதற்கான பாரம்பரிய மேய்ச்சற் தரையினை அயல் மாவட்ட பெரும்பான்மையின மக்கள் பயிர்செய்வதென்ற கோதாவிலே அந்தப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று அந்தப் பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளை மேய்க்க முடியாமல் அதனால் ஈட்டும் வருமானங்களை இழந்து தவிக்கின்றார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடி உடனடியாக அத்துமீறி குடியேறியிருப்பவர்களை நீதிமன்ற உத்தரவைப் பெற்று அங்கிருந்து அகற்றுமாறு பொலிசாருக்கும், மகாவலி அதிகாரசபைக்கும் உத்தரவு வழங்கியிருக்கின்றார். அதேபோன்று அந்தப் பிரதேசத்தில் ஆக்கிரமித்துள்ள அயல் மாவட்ட மக்களுக்கு அந்த அந்த மாவட்டங்களில் விவசாய நடவடிக்கைகளுக்கு இடம் வழங்குமாறும் கூறியிருக்கின்றார்.

ஆனால் நேற்று அங்கு என்ன நடந்திருக்கின்றது. முன்னாள் ஆளுநர் அனுராதா ஜகம்பத்தும், அடாவடி பிக்கு அம்பிட்டிய தேரரும் புதிதாக ஒரு புத்த சிலையை அங்கு கொண்டு சென்று வைத்துள்ளார்கள். ஜனாதிபதி ஒரு முடிவை எடுக்கின்றார். அவர் முடிவை அறிவித்து மறுநாளே இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் நாங்கள் என்ன சிந்திக்க வேண்டும். இந்த நாட்டை ஆள்வது ஜனாதிபதியா? பாராளுமன்றமா? அல்லது புத்த பிக்குகளா? வியத்மக அமைப்பினரா? என்ற சந்தேகமே எழுகின்றது.

இவ்வாறான விடயங்களை நோக்கும் போது தமிழீழக் கனவு எவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் இருந்து இல்லாமல் செல்லும். அந்த வகையில் இனப் பிரச்னை தீரவேண்டும் என்பதற்காக 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2009 இல் தமிழீழ விடுதலை புலிகளை அழித்துவிட்டோம் என்ற கூறும் நீங்கள் இனப்பிரச்னைக்கு தீர்வைக் காண்பதற்கு முயற்சி செய்கின்றீர்களா என்றால் இல்லை. மாறாக வடக்கு -கிழக்கிலே புத்த சிலைகளை நிறுவி, பெரும்பான்மை மக்களைக் குடியேற்றி வடக்கு கிழக்கிலே வாழும் தமிழ் பேசும் மக்களின் குடிப்பரம்பலை குறைப்பதே உங்களது நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. இந்த நிலை தொடருமானால் இந்த நாடு பிளவுபடுவதைத் தவிர வேறு ஒன்றும் நடக்கப் போவதில்லை என்று தெரிகிறது-என்றார். (அ)

## கீரிமலை...

போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்படும் பிரதேசத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை தற்போது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 50 வருட கால பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் 33 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசித்து வரும் நிலையில் , தம்மை மீள்குடியேற்றுமாறு கோரி போராட்டங்களையும் பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களை மீள் குடியேற்றாமல் அவர்களின் காணிகளை சட்டவிரோதமாக சுவீகரித்து அங்கு அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுத்துள்ளனர்.

முதலீட்டாளர்கள் வடமாகாணத்தை நோக்கி வருவதனை வரவேற்கிறோம். அவர்கள் சட்ட ரீதியாக எமது மக்களை பாதிக்காத வகையில் அவர்களின் முதலீடுகள் அமைய வேண்டும்.

ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள சுமார் 12 ஏக்கர் காணியை எடுத்துக் கொண்டு , அதற்குள் இருக்கும் தனியார் காணிகளுக்கான இழப்பீடுகளை தற்போதைய சந்தை பெறுமதியின் அடிப்படையில் வழங்க வேண்டும்.

அதேவேளை ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள சுமார் 18 ஏக்கர் காணியையும் உடனடியாக காணி உரிமையாளர்களுக்கு கையளிக்க வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள பகுதிகளில் தொன்மையான ஆலயங்களான ஆதி சிவன் ஆலயம், விஷ்ணு ஆலயம், சடையம்மா மடம் உள்ளிட்ட மடாலயங்கள் என்பவை விடுவிக்கப்பட வேண்டும்.

அதேவேளை குறித்த ஜனாதிபதி மாளிகையை தங்குமிட விடுதிக்கு தருமாறு புலம்பெயர் தமிழர்கள் தமக்கு வழங்குமாறு கோரிய போதிலும், ஒரே ஒரு தமிழர் மட்டும் இருக்கும், அந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளனர்.

இந்த ஜனாதிபதி மாளிகை என்ன அடிப்படையில், வழங்கப்பட்டது என்பதனை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

## பொலிஸ்மா...

அமர்த்தப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபரை மீண்டும் நியமிப்பது தொடர்பான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அனைத்து உத்தரவுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக சீனாவின் பீஜிங்கிலிருந்து வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ்/ம் இலங்கையில் இல்லாத போது, பொலிஸ் மா அதிபரை அரசியலமைப்புச் சபை நீக்கியது பாரிய தவறு என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு திரும்பவுள்ள பின்னணியில் பொலிஸ் மா அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை சதித்திட்டத்தின் விளைவே என பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் பொலிஸ் பொறுப்பதிகாரியும் நாட்டில் இல்லாத போது பொலிஸ் மா அதிபரை நீக்குவது நாட்டிலுள்ள முழு பொலிஸ் படையையும் முடக்குவதற்கு சமமானது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பதவிக்காலம் முடிவடைந்த பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் சேவையை மேலும் மூன்று வாரங்களுக்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

# பருத்தித்துறையில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 18

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் 10 ஆயிரம் மில்லிலீட்டர் கசிப்புடன் 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## அடுத்த...

பெரமுன என்பன பட்டியலில் இல்லை, ஆக இருமுனைபோட்டிதான் காணப்படும்.

அதேவேளை, சுகாதார அமைச்சை மீள கட்டியெழுப்ப முடியும். சிறந்த அரசியல் வேலைத்திட்டமொன்று இருந்தால் சுகாதார அமைச்சை மட்டுமல்ல எல்லா துறைகளையும் கட்டியெழுப்பலாம்-என்றார். (அ)

## ஹர்த்தாலுக்கு...

ருமான எம். ஏ. சுமந்திரன் மேற்படி தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக இருந்த ரி. சரவணராஜா தனது நீதித்துறை கடமைகளை செய்த காரணத்தால் அச்சுறுதலுக்கு உள்ளாக்கப்பட்டு, பதவியிலிருந்து இராஜிநாமா செய்து நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டதை எதிர்த்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் அனைத்து மக்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்த கடையடைப்பு நடவடிக்கை மூலம் தமிழ் நீதிபதி ஒருவருக்கு நிகழ்ந்த இந்த மிக மோசமான செயல்பாட்டை திரும்ப திரும்ப உலகுக்கு எடுத்தக் காட்ட நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே இது சம்பந்தமாக அனைவரினது ஒத்துழைப்பையும் முழுமையாக எதிர்பார்க்கிறோம்.", என்றுள்ளது. (ஐ)

## ஆக்கிரமிப்பு...

மேற்குப் பிரதேச சபை பிரதித் தவிசாளர் பொ. செல்லத்துரை, ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் அதன் உபதலைவர் என். நகுலேஸ் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, கட்சிகளின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் உரையாற்றுகையில்-

நீதித்துறையில் பணியாற்றிய நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக உருவாக்கப்பட்ட அழுத்தம் மற்றும் அச்சுறுத்தலால் அவருக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. இதனாலேயே அவர் தற்போது இந்த நாட்டை விட்டே வெளியேறினார்" என்றார். (அ)

## சீன வர்த்தகர்...

வர்த்தகர்களும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் புவிசார் அமைவிடம் காரணமாக ஆசிய பிராந்தியத்தில் மேற்கு சந்தையை வெற்றிகொள்வதற்கு இலங்கையைப் பயன்படுத்துவதற்கு விசேட சந்தர்ப்பம் காணப்படுகிறது.

உலகில் உள்ள அனைத்து சக்திவாய்ந்த பொருளாதாரங்களுடனும் நட்புறவுடன் செயற்படுவதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனவும், அதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்பதே தமது நோக்கமாகும்-என்றார். (அ)

## இஸ்ரேலில்...

இறுதிக் கிரியைகளின் பின்னர் அனுலா ஜயதிலகவின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என தூதுவர் பண்டார கூறினார்.

ஹமாஸ் இஸ்லாமிய போராளிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட குழுவில் இலங்கையர்களும் உள்ளனர் என்ற தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பண்டார தெரிவித்தார்.

ஜோர்தானில் இருந்து இஸ்ரேலுக்கு சட்டவிரோதமாக எல்லையைக் கடந்ததாக இஸ்ரேல் மற்றும் ஜோர்தான் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கைப் பெண்கள் மீண்டும் ஜோர்தானுக்கு அனுப்பப்படவுள்ளதுடன், பலஸ்தீன பகுதிகளில் இருந்து 3 குடும்பங்களைச் சேர்ந்த 17 இலங்கையர்களை வெளியேற்ற பலஸ்தீன பிரதிநிதி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தூதுவர் தெரிவித்தார். (அ)

## 30 பண்ணை...

பொருத்தமான பொது-தனியார் கூட்டாண்மை மாதிரியை அடையாளம் காணாமல், பல அரச முயற்சியாண்மைகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதன் மூலம்,இந்நாட்டில் பொது வளங்கள் சரியான மதிப்பீடு இல்லாமல் குறைவாக மதிப்பிடப்பட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கை மாற்றுவதும்,மோசடி மற்றும் ஊழலுக்கு இடம் கொடுப்பதும் நடந்து வருகின்றது. " எனவும் சஜித் குறிப்பிட்டார்.

இதனால் அந்நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பணி ரீதியிலான பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும், கடந்த காலங்களில் அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது தோல்வியடைந்துள்ள சூழ்நிலையில், இந்நிறுவன கட்டமைப்பு நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

மில்கோ நிறுவனம் மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பண்ணைகளை இந்தியாவிற்கு விற்பனை செய்வது தொடர்பில் நிலையியல் கட்டளை 27 (2) இன் கீழ் அரசாங்கத்திடம் நேற்று கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசாங்கத்திற்கு முன் பின் முரணான கருத்துக்கள் உள்ளன என்றும்,இவ்வாறு விற்பனை செய்ய முயல்வது கொழும்பு பால் நிறுவனம், அம்பேவெல ஸ்பிரே டை தொழிற்சாலை, திகன பால் தொழிற்சாலை,பொலநறுவை தொழிற்சாலை மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 30 இற்கும் மேற்பட்ட பண்ணைகள் என்றும்,நாட்டை விற்றுக்கொண்டிருக்கும் சுபீட்சத்தின் தொலைநோக்கு ஆணையை அமுல்படுத்துவதாக இதனைக் கருதலாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பஸ் நிலையம் முன் போராட்டம்

## சனியன்று நடத்துவதற்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

**பலஸ்தீன மக்கள் மீதான இன அழிப்புத் தாக்குதலுக்கு எதிரான கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாக எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்று கூடுமாறு சமூக நீதிக்கான வெகு ஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.**

**இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அதன் இணைச் செயலாளர் த.ஸ்ரீபிரகாஸ் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.**

**அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-**

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசினதும் அதன் மேற்கு லக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம். அத்துடன் காஸா மீதான ஆக்கிரமிப்பு யுத்தமானது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு கொன்றழிக்கப்பட்டதற்கு ஒப்பானதாக பார்க்கப்பட வேண்டியதே. எனவே, ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு விடுதலை வேண்டி ஒருமித்து குரல் கொடுப்போம்.

இஸ்ரேலிய பயங்கரவாத ஆட்சியினர் காஸா மக்களுக்கான உணவு, மருத்துவம், மின்சாரம், தண்ணீர் ஆகிய அடிப்படைத் தேவைகள் சென்றடைவதைத் தடுத்ததோடு பல கட்டடங்களைத் தரைமட்டமாக்கி மக்களையும் கொன்றொழித்து வருகின்றனர். எல்லா ஒடுக்குமுறைப் போர்களிலும் குழந்தைகளின் உடலங்களே உலக மக்களின் மனச்சாட்சியை உலுக்குவதாக அமைந்து விடுவது போல் காஸா குழந்தைகள் பூக்களாகவும், பிஞ்சுகளாகவும் கருகிக்கிடப்பது தாங்க முடியாத மனவேதனையைத் தருகின்றது. இந்த அனுபவங்களைத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் சுமந்தனர்.

உலக வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா போன்றன இஸ்ரேலின் காஸா மக்கள் மீதான இன அழிப்புக்கு உடந்தையாக இருப்பதோடு ஏனைய நாடுகள் இந்த அழிப்பைத் தடுத்து விடக் கூடாது என்பதற்காக கடலிலும் தரையிலும் பாதுகாப்பு அரண்களாக யுத்தக் கப்பல்களையும் தமது படைகளையும் நிலைநிறுத்தியுள்ளன.

இதில் அவர்களின் அரசியல் பொருளாதார அதிகார நலன்கள் இருக்கின்றன. காஸா மக்களுக்கு எதிரான இந்தத் தாக்குதலை வேடிக்கை பார்த்து நிற்கும் அரபு நாடுகளும் ஏனைய நாடுகளும் தமது பொருளாதார நலனையும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு தமது அடிமை விசுவாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

உக்ரைன், ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்கு எதிராகக் கண்டனங்களை வெளிப்படுத்தி நின்ற ஐக்கிய நாடுகள் சபை இங்கு அனுதாபங்களை மட்டுமே வெளிப்படுத்தி தனது பக்கச்சார்பை நிரூபித்து நிற்கின்றது. பாதுகாப்பான சுதந்திரமான பலஸ்தீன நாடு அமைவதை உலகின் பெரும்பாலான நாடுகள் குறிப்பிட்டு வருவது போன்று அந்த மக்களின் இறையாண்மைக்காகவும் சுதந்திர உரிமைக்காகவும் பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுப்பதற்கு எதிர்வரும் சனிக்கிழமை 10 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்றுகூடுமாறு வேண்டுகின்றோம்.-என்றுள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபா ஒதுக்குக!

## தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஒக். 18

அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபாயை ஒதுக்குமாறு நிதி அமைச்சிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

தேர்தல் நடத்தப்படுமானால், குறிப்பிட்ட ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து நிதியை ஒதுக்குமாறு நிதியமைச்சிடம் கோருவது பொதுவான நடைமுறை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பொருத்தமான காலத்தில் நடத்தப்படும் என்றும் அந்த காலத்துக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க முன்னதாக தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலை சரியான நேரத்தில் அறிவிக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருந்தாலும் தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விவகாரங்களில் என்ன நடக்கும் என்பதை அவர்களால் கணிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்திருந்தார். (அ)

# மயிலத்தமடுவில் புதிய புத்தர் சிலை!





மட்டக்களப்பு, ஒக். 18

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத யஹம்பத்தின் பங்களிப்புடன் புதிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

மாதவனை மயிலத்தமடு பிரதேசம் பாரம்பரியமாக தமிழ் பால் பண்ணையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அப்பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள குடியேற்றவாசிகளுக்கு ஆதரவாக புதிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

# வைத்தியசாலையில் பிள்ளை மூலம் திருட்டுகளில் ஈடுபட்ட பெண் கைது!

கொழும்பு, ஒக். 18

தமது பிள்ளை மூலம் பணம் மற்றும் கைபேசிகளை திருடும் மோசடியில் ஈடுபட்ட தாய் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் குழந்தைகளுடன் தங்கியிருந்தவர்களின் கைபேசிகள் மற்றும் பணம் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய குறித்த தாய் கைது செய்யப்பட்டார்.

அவர் பொது இடங்களில் தமது பிள்ளையை பயன்படுத்தி நீண்டகாலம் திருட்டில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# பலஸ்தீன இராச்சியத்தை உறுதி செய்யவேண்டும்!

## சஜித் சபையில் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 18

இஸ்ரேலும் பலஸ்தீனமும் போரை உடனடியாக நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கு இடையே தொடர்ச்சியாக போர் நடைபெற்று வருகிறது.

பயங்கரவாத அமைப்பினாலும், அரச பயங்கரவாதத்தினாலும் இதுவரை ஆயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டுள்ளன.

இந்த யுத்தத்தினால் சிறுவர்கள், தாய்மார், பெண்கள், பொது மக்கள் என பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அமைப்பிடம் நாம் ஒன்றை கேட்டுக்கொள்கிறோம்.

இந்த யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டும்.



பாலஸ்தீன இராஜ்ஜியத்தை நாம் உறுதி செய்ய வேண்டும். பாலஸ்தீன இராஜ்ஜியம் தொடர்பான எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை.

யுத்தம் இடம்பெறும் பகுதிகளில் வாழும், இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

# தனியார் நிறுவனம்மீது சூடு!

கொழும்பு, ஒக். 18

வெலிக்கடை, பழைய கோட்டை வீதிப் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுவனத்தின் குளியலறையின் ஜன்னல் மீது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனத்தின் முகாமையாளரால் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து சம்பவ இடத்திலிருந்து 9 மில்லிமீற்றர் ரகரவையின் பகுதியொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த நிறுவனத்தின் உரிமையாளரை அச்சுறுத்தும் நோக்கில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இலங்கையை இலகுவாக வீழ்த்தி முதல் வெற்றியை பெற்றது ஆஸி!




லக்னோ, ஒக். 18

இலங்கை அணியை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் எளிதில் வீழ்த்தி நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது அவுஸ்திரேலியா.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா - இலங்கை அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 43.3 ஓவர்கள் முடிவதற்கு உள்ளாகவே அனைத்து விக்கெட்களையும் இழந்து 209 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க ஜோடியை தவிர இலங்கை அணியில் மற்ற வீரர்கள் பெரிதாக விளையாடவில்லை.

தொடக்கம் கொடுத்த குசல் பெரேரா மற்றும் பதும் நிசங்க இணை 125 ஓட்டங்கள் குவித்தது. இந்த இருவரையும் கம்மின்ஸ் ஆட்டமிழக்க செய்தார். நிசங்க 61 ஓட்டங்களும் குசல் பெரேரா 78 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்து பிறகு இலங்கை அணியின் விக்கெட் மளமளவென சரிந்தது. சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்ததால் 209 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அவுஸ்திரேலிய அணி தரப்பில் அபாரமாக பந்து வீசிய அடம் ஸம்பா 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்பின் 210 ஓட்டங்கள் இலக்கை துரத்திய அவுஸ்திரேலியாவுக்கு வோர்ணர், ஸ்மித் ஏமாற்றினாலும் மிட்செல் மார்ஷ் சிறப்பான தொடக்கம் கொடுத்தார். அரைச்சதம் கடந்த அவர் 52 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார். இதன்பின் மார்னஸ் லபுஷான் மற்றும் ஜோஷ் இங்கிலிஸ் இணைந்து இணைப்பாட்டத்தை கட்டமைத்தனர். இதனால் அவுஸ்திரேலியா இலக்கை நோக்கி வேகமாக முன்னேறியது. லபுஷான் 40 ஓட்டங்களும் இங்கிலிஸ் 58 ஓட்டங்களும் எடுத்த நிலையில் விக்கெட்டை இழந்தனர்.

இதன்பின் மக்ஸ்வெல் அதிரடியாக விளையாட 88 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. மக்ஸ்வெல் 31 ஓட்டங்களும் ஸ்ரொய்னிஸ் 20 ஓட்டங்களும் எடுத்து இறுதிவரை களத்தில் இருந்தனர். இலங்கை தரப்பில் மதுசங்க அதிகபட்சமாக 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

5 முறை சம்பியனான அவுஸ்திரேலியா, முதல் போட்டியில் இந்தியாவிடம் 6 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இதேபோல் இரண்டாவதாக நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்திலும் தோல்வி கண்ட நிலையில், இலங்கையை வென்று நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது. (ஐ)

## தோல்வியில் மோசமான சாதனையை சிம்பாவேயுடன் பகிர்ந்த இலங்கை




லக்னோ, ஒக். 18

உலகக் கிண்ணத் தொடர்களில் அதிகமுறை தோல்வியடைந்த அணிகள் பட்டியலில் சிம்பாப்வே அணியின் மோசமான சாதனையை இலங்கை சமன் செய்தது.

இந்தியாவில் நடைபெற்று வரும் நடப்பு உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் தொடரில், லக்னோவில் நடைபெற்ற 14ஆவது லீக் போட்டியில் இலங்கை - அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

இதில் இலங்கை அணி தோல்வியடைந்தது.

தொடர்ந்து, மூன்று போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ள இலங்கை அணி புள்ளிப்பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளது.

இதன்மூலம், உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இதுவரை 42 முறை தோல்வியை சந்தித்துள்ள இலங்கை அணி, சிம்பாப்வே அணியுடன் முதல் இடத்தை பகிர்ந்துள்ளது.

இரண்டாவது இடத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 35 தோல்விகளுடன் உள்ளது. (ஐ)

## இந்தியாவில் மக்ஸ்வெல் புதிய சாதனை படைத்தார்!



லக்னோ, ஒக். 18

இந்திய மண்ணில் அதிக சிக்ஸர்கள் அடித்த வெளிநாட்டு வீரர் என்ற சாதனையை அவுஸ்திரேலிய வீரர் கிளென் மக்ஸ்வெல் படைத்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளின் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்தார்.

இந்த போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் கிளென் மக்ஸ்வெல் 21 பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 4 பௌண்ட்ரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும்.

இந்தப் போட்டியில் 2 சிக்ஸர்கள் அடித்ததன் மூலம், இந்திய மண்ணில் அனைத்து வடிவிலான போட்டிகளிலும் அதிக சிக்ஸர்கள் அடித்த வெளிநாட்டு வீரர் என்ற பெருமையைப் பெற்றார் மக்ஸ்வெல்.

இந்திய மண்ணில் இதுவரை அவர் 51 சிக்ஸர்களை விளாசியுள்ளார். இந்தப் பட்டியலில் அவருக்கு அடுத்தடுத்த இடங்களில் பொலார்ட் (49 சிக்ஸர்கள்), அஸ்கர் ஆப்கான் (48 சிக்ஸர்கள்), ஏபி டி வில்லியர்ஸ் (48 சிக்ஸர்கள்) உள்ளனர். (ஐ)

# சிறப்பான தொடக்கத்தை நாம் பயன்படுத்தத் தவறிவிட்டோம்!

## பதும் நிசங்க தெரிவிப்பு




லக்னோ, ஒக். 18

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கிடைத்த சிறப்பான தொடக்கத்தை இலங்கை பயன்படுத்தி கொள்ளத் தவறிவிட்டதாக அந்த அணியின் பதும் நிசங்க தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் லக்னோவில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவுஸ்திரேலியா - இலங்கை அணிகள் மோதின. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 209 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. எனினும்இ சிறப்பான தொடக்கத்தை இலங்கை அணி பெற்றது. 125 ஓட்டங்களுக்கே முதல் விக்கெட்டை இழந்தது. அடுத்த 84 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இந்த நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கிடைத்த சிறப்பான தொடக்கத்தை இலங்கை பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டதாக பதும் நிசங்க தெரிவித்துள்ளார்.

போட்டி முடிவடைந்த பின்னர் அவர் கூறுகையில்,

மிகவும் சிறப்பான தொடக்கத்தை கொடுத்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ள தவறியதை நினைத்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். சிறப்பான தொடக்கத்தை பயன்படுத்தத் தவறியதால் எதிரணிக்கான இலக்கு 210 ஆக குறைந்தது. இந்த மாதிரியான விக்கெட்டில் நாங்கள் 300 ஓட்டங்களுக்கு நெருக்கமான ஓட்டத்தை எடுத்திருக்க வேண்டும். அதை எடுக்கத் தவறியதே எங்களது தோல்விக்கு காரணம். என்னுடைய சிறப்பான ஆட்டத்தை அணிக்காக வெளிப்படுத்தியதாக நான் நம்புகிறேன். இனிவரும் போட்டிகளிலும் என்னுடைய பங்களிப்பை அணிக்கு வழங்க காத்திருக்கிறேன். எங்களது தவறுகளை திருத்திக் கொண்டு இனிவரும் போட்டிகளில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற வேண்டும் - என்றார்.

இந்தப் போட்டியில் இலங்கையின் தொடக்க ஆட்டக்காரரான பதும் நிசங்க 67 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# சர்வதேச உறவுகளில் மாற்றம்?

## இந்தியா இஸ்ரேலுக்கு உறுதியான ஆதரவு: ரஷ்யாவின் சுதந்திர பாலஸ்தீன தீர்வு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

மத்திய கிழக்கின் இரும்புக் கோட்டை என்று சொல்லிக் கொண்டிருந்த இஸ்ரேல் மீது பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பு கடந்த சனிக்கிழமையன்று கடுமையான தாக்குதலை நடத்தியது. காசா பகுதியிலிருந்து தொடுக்கப்பட்ட தாக்குதலால் உலக நாடுகளையே திரும்பி பார்க்க வைத்திருக்கிறது.

இதனையடுத்து பாரியளவல் போர் சூழல் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்திருக்கின்றன. குறிப்பாக, பாலஸ்தீனத்துக்கு சீனா, ஈரான், சிரியா, சவுதி அரேபியா, ஏமன், கத்தார், தென்னாப்பிரிக்கா, லெபனான் போன்ற நாடுகளும், இஸ்ரேலுக்கு இந்தியா, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, நோர்வே, பிரான்ஸ், ஸ்பெயின், போலந்து, உக்ரைன், பிரேசில், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்திருக்கின்றன.

**இந்தியா இஸ்ரேலுக்கு உறுதியான ஆதரவு!**

கடந்த வாரம் போர் தொடங்கிய போதே இந்தியப் பிரதமர் மோடி, இஸ்ரேலில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கடினமான நேரத்தில் இஸ்ரேலின் பக்கம் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம் என்று இஸ்ரேலுக்கு தனத ஆதரவை தெரிவித்திருந்தார்.



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தொலைபேசி வாயிலாக பேசிய பிரதமர் மோடி, தற்போதைய கடினமான இந்தத் தருணத்தில் இஸ்ரேலுக்கு இந்திய மக்கள் தங்கள் உறுதியான ஆதரவை அளித்துவருகிறார்கள். பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் இந்தியா உறுதியாகக் கண்டிக்கிறது எனவும் தெரிவித்தார்.

**இந்தியாவின் பாலஸ்தீன நிலைப்பாடு:**

பாலஸ்தீன மக்களின் உரிமைகளை ஆதரிக்கும் வரலாற்று பாரம்பரியத்தை இந்தியா கொண்டுள்ளது. பாலஸ்தீன விவகாரத்தில் இந்தியாவின் ஆதரவு அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக நீண்ட காலம் இருந்தது.

1974 ஆம் ஆண்டில், யாசர் அராபத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை அமைப்பை (பிஎல்ஓ) பாலஸ்தீன மக்களின் ஒரே மற்றும் சட்டபூர்வமான பிரதிநிதியாக அங்கீகரித்த முதல் அரபு அல்லாத நாடாக இந்தியா இருந்தது. அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் யாசர் அராபத்துக்கும் இடையே நல்ல உறவு இருந்தது.

1988இல், பாலஸ்தீன அரசை அங்கீகரித்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. 1996 ஆம் ஆண்டில், இந்தியா தனது பிரதிநிதி அலுவலகத்தை காஸாவில் திறந்தது. 2003 அக்டோபரில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானத்தை இந்தியாவும் ஆதரித்தது. இது இஸ்ரேல் பிரிவினைச் சுவரைக் கட்டும் முடிவை எதிர்த்தது.

2011 இல், பாலஸ்தீனத்தை யுனெஸ்கோவின் முழு உறுப்பினராக்குவதற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது. 2012 ஆம் ஆண்டில், ஐ.நா.வில் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் பாலஸ்தீனத்தை “உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடாக” மாற்ற வேண்டும் என்ற ஐ.நா பொதுச் சபை தீர்மானத்தை பிறநாடுகளுடன் இணைந்து இந்தியா முன்மொழிந்தது. இந்த முன்மொழிவுக்கு ஆதரவாக இந்தியாவும் வாக்களித்தது. 2015 செப்டம்பரில், ஐநா வளாகத்தில் பாலஸ்தீனக் கொடியை நிறுவ இந்தியாவும் ஆதரவளித்தது.

**இந்திரா காந்தி - யாசர் அராபத் நல்உறவு:**

சர்வதேச மற்றும் இருதரப்பு அளவிலான வலுவான அரசியல் ஆதரவைத் தவிர, பாலஸ்தீனியர்களுக்கு பல்வேறு வகையான பொருளாதார உதவிகளையும் இந்தியா வழங்கியுள்ளது. முன்னாள் பிரதமர் இந்திராகாந்திக்கும், பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவராக இருந்த யாசர் அராபத்துக்கும் இடையே நல்லுறவு தொடர்ந்தது.





**இந்தியாவின் ஆதரவு முன்பு பாலஸ்தீனத்துக்கு, இப்போது இஸ்ரேலுக்கு மாறிய நிலைப்பாடும், இந்த மோதலுக்கான தீர்வு சுதந்திர பாலஸ்தீனத்தை உருவாக்குவது தான் எனும் ரஷ்யா கூறியுள்ளமை சர்வதேச உறவுகளின் மாற்றமாக கருதலாம்**



காஸா நகரில் உள்ள அல் அசார் பல்கலைக்கழகத்தில் ஜவஹர்லால் நேரு நூலகம் மற்றும் காஸாவின் டெய்ர் அல்-பலாவில் உள்ள பாலஸ்தீன தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள மகாத்மா காந்தி நூலகம் உள்ளிட்ட மாணவர் செயல்பாடு மையங்களை உருவாக்க இந்திய அரசு உதவியுள்ளது. இவை தவிர பாலஸ்தீனர்களுக்கு பல திட்டங்களை உருவாக்கவும் இந்தியா உதவி வந்தது.

பிப்ரவரி 2018 இல், பாலஸ்தீன பகுதிக்கு நரேந்திர மோடி சென்றார். அப்போது, பாலஸ்தீன நிர்வாக அதிபர் மஹ்மூத் அப்பாஸ், மோடிக்கு நாட்டின் உயரிய விருதான “கிராண்ட் காலர் ஆஃப் தி ஸ்டேட் ஆஃப் பாலஸ்தீன” விருதை வழங்கினார்.

கடந்த ஆண்டு, பாலஸ்தீனர்களுடனான சர்வதேச ஒற்றுமை தினத்தின் போது, பிரதமர் மோடி ஒரு செய்தியை வெளியிட்டார். இதில் பாலஸ்தீனத்திற்கு இந்தியாவின் நிலையான ஆதரவை பிரதமர் வலியுறுத்தினார். இந்தியாவும் பாலஸ்தீனமும் நட்புறவு கொண்ட நாடுகளாக வரலாற்று உறவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. பாலஸ்தீன மக்கள் சுயசார்பு மற்றும் கண்ணியத்துடன் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டைப் பெறுவதற்கு நாங்கள் எப்போதும் ஆதரவளித்து வருகிறோம். பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும், இதன் மூலம்




அவர்கள் ஒரு விரிவான மற்றும் பரஸ்பரம் ஒப்புக்கொண்ட தீர்வைக் காண்பார்கள் என்றும் நம்புகிறோம் என பிரதமர் மோடி கூறினார்.

இந்திய சுதந்திரக் காலம் தொட்டே, இந்தியாவின் ஆதரவு என்பது பாலஸ்தீனத்துக்குத்தான் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. குறிப்பாக, 1948-ல் இஸ்ரேல் நாட்டை உருவாக்குவதற்கான தீர்மானம் ஐ.நா சபையில் கொண்டுவரப்பட்டபோது, அதை எதிர்த்து வாக்களித்த நாடு இந்தியா. அதேபோல, முன்னாள் பிரதமர் நேரு, இந்திரா காந்தி என அனைத்து இந்தியப் பிரதமர்களும் பாலஸ்தீனத்தையே ஆதரித்துவந்தனர்.

1981-ம் ஆண்டு ‘ளுழடனையசவைல றவைா வாந ேயடநளவவைநெ நழிடந’ என்ற வாசகத்துடன் இந்திய - பாலஸ்தீனக் கொடிகள் மற்றும் மக்கள் இடம்பெற்றிருக்கும் தபால்தலையையும் இந்தியா வெளியிட்டு பாலஸ்தீனுக்குத் தனது தார்மிக ஆதரவை இந்தியா வழங்கியது. தற்போதைய போர்ச் சூழலில், அகில இந்



திய காங்கிரஸ் கட்சியும் தனது ஆதரவை பாலஸ்தீனத்துக்கு வழங்கியிருக்கிறது.

**அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் இந்தியா ?**

சீனா தொடர்ச்சியாக இந்தியாவின் எல்லைப்பகுதிகளில் அத்துமீறி நுழைவது, ஆக்கிரமிப்பு - கட்டுமானங்களை மேற்கொள்வது, இந்திய ராணுவத்தினரோடு மோதலில் ஈடுபடுவது அதிகரித்தபடி சென்றமையால் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலக நாடுகளுடன் இந்தியா நெருக்கத்தை அதிகரித்தது.

பசிபிக் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதற்காக யுருமுருளு எனும் கூட்டமைப்பை அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் ஏற்படுத்திக் கொண்டது. பா.ஜ.க ஆட்சியின் போதும் இந்தியா நடுநிலையான நாடாக இருந்து வருகிறது என்றாலும்கூட, மாறிவரும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு சூழல்களில் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டையே எடுத்துவருகிறது.

அதற்கேற்ப, அமெரிக்கா தோள் கொடுக்கும் இஸ்ரேல் நாட்டுடனும் இந்தியா தனது உறவை மேம்படுத்தி வருகிறது. தற்போதைய போர்ச் சூழலில் சீனா, பாலஸ்தீனத்தை ஆதரிக்கிறது. ரஷ்யாவும் இந்தப் போரில் இஸ்ரேலுக்கு ஆதரவான அமெரிக்கத் தலையீட்டைக் குறிப்பிட்டு மூன்றாவது நாடு நுழைகிறது என எச்சரித்திருக்கிறது. வழக்கம்போல அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் இஸ்ரேலை ஆதரிக்கின்றன. இந்தியாவும் வழக்கமான தனது நடுநிலை, சமாதானம், போர் நிறுத்தம் என்ற வார்த்தைகளைவிட்டு இஸ்ரேலுக்கே தனது ஆதரவு என வெளிப்படையாகப் பேசியிருக்கிறது.

**இஸ்ரேல், இஸ்லாமியர்களுக்கு எதிரானதா ?**

இஸ்ரேல், இஸ்லாமியர்களுக்கு எதிரானது என்ற பிம்பம் பாரியளவில் உருவாகியிருக்கிறது. பா.ஜ.க-வும் இஸ்லாமியர்களைப் புறக்கணிக்கும் அரசியலைச் செய்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பா.ஜ.க ஆதரவாளர்கள் இஸ்ரேலை விரும்புகின்றனர்.

இந்தியாவில் இஸ்ரேலுக்கு ஆதரவு என்பது இஸ்லாமியர்களுக்கு எதிரான உணர்வால்தான் ஏற்படுகிறது. அதேநேரம் காங்கிரஸ் கட்சி பாலஸ்தீனத்துக்கு ஆதரவு எனும் பேரில் தீவிரவாதத்துக்கு துணைபோகிறது என பா.ஜ.க குற்றம் சாட்டிவருகிறது.

இஸ்ரேலில் இன்று என்ன நடக்கிறதோ, அதைத்தான் 2004-2014 ஆம் ஆண்டுகளுக்கு இடையே இந்தியா சந்தித்தது என்று பா.ஜ.க கூறியுள்ளது.

**இஸ்ரேல்-பாலஸ்தீன் மோதலுக்கான தீர்வை சொல்லும் ரஷ்யா!**

சுதந்திர பாலஸ்தீனத்தை உருவாக்குவதுதான் தீர்வு

(16ம் பக்கம் பார்க்க)

# நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும் ஜனநாயகத்துக்கு தேர்தல்கள் தேவை



கலாநிதி ஜெகான் பெரேரா

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பது தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக வெளியான செய்தி திடீரென்று தேர்தல் செயன்முறையில் அக்கறையை தோற்றுவித்திருக்கிறது.

அடுத்த வருடம் நடத்தப்படவேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் முதற்சுற்று வாக்கு எண்ணிக்கையில் அதிகமான வாக்குகளைப் பெறப்போவதில்லை என்ற ஒரு அச்சவுணர்வும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் எமது அயல்நாடான மாலைதீவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் முதற்சுற்று வாக்கு எண்ணிக்கையில் எந்தவொரு வேட்பாளரும் ஐம்பது சதவீத வாக்குகள் இலக்கை எட்டவில்லை.

இலங்கையில் முதலாவது ஜனாதிபதி தேர்தல் 1982 அக்டோபரில் நடைபெற்றது. அதிலும் அதைத் தொடர்ந்து இதுவரையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் வெற்றிபெற்றவர்கள் முதலாவது சுற்று வாக்கு எண்ணிக்கையிலேயே ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்கு போவது என்பது இலங்கையைப் பொறுத்தவரை புதியதொரு அனுபவமாக இருக்கும். ஆனால், ஜனாதிபதி தேர்தலில் மூன்று சுற்றுக்கள் வாக்கு எண்ணிக்கையை நடத்துவதற்கு எமது அரசியலமைப்பில் ஏற்பாடு இருக்கிறது. மூன்று சுற்றுக்களுக்கு பின்னரும் எந்த வேட்பாரும் ஐம்பது சதவீத வாக்குகள் இலக்கை அடையவில்லையானால் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளரே ஜனாதிபதியாக தெரிவானதாக பிரகடனம் செய்யப்படும்.



இந்த சந்தேகத்துக்கு இடமான அடிப்படையில் ஜனாதிபதி பதவியை ஒழிக்கும் யோசனைக்கு புறம்பாக தேர்தல் முறையில் மாற்றத்தைச் செய்வதற்கான திட்டங்கள் குறித்தும் பேசப்படுகிறது.

உத்தேசிக்கப்படும் தேர்தல் சீர்திருத்தங்கள் பாராளுமன்றத்தின் மொத்தம் 225 உறுப்பினர்களில் 160 பேர் பழைய தொகுதி அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவதற்கும் மீதி 65 பேரும் விகிதாசார வாக்களிப்பு முறையின் கீழ் தேசிய பட்டியலிலும் மாவட்ட பட்டியலிலும் கட்சிகள் பெறகின்ற வாக்குகளின் அடிப்படையில் தெரி வுசெய்யப்படுவதற்கும் வகைசெய்யும்.

இரு யோசனைகளுமே பெருவாரியான பிரச்னைகளைக் கொண்டுவரும். அவை குறித்து கடந்த காலத்தில் தனியாகவும் கூட்டாகவும் பிரசாரம் செய்யப்பட்டிருந்தன. இடைக்கால சட்ட ஏற்பாடுகளாகவும் 2000 ஆம் ஆண்டி லும் 2015 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றதைப் போன்று புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் செயன்முறையின் அங்கமாகவும் அவற்றை கொண்டுவருவதற்கு முயற்சிக்கப்பட்டது.

ஆனால், ஒவ்வொரு தடவையும் பல்வேறு அரசியல் கட்சிகளிடம் இருந்தும் குழுக்களிடமிருந்தும் வந்த ஆட்சேபனைகள் மற்றும் சவால்களின் விளைவாக தேர்தல் சீர்திருத்த செயன்முறை தடங்கலுக்குள்ளானது.

உத்தேச அரசியலமைப்புத் தந்திரோபாயம் வெற்றியளிக்குமானால் அண்மைய எதிர்காலத்தில் நடத்தப்படவேண்டியிருக்கும் இரு பெரிய தேர்தல்களுக்கு இடையூறு ஏற்படும்.

முதலாவதாக 2024 அக்டோபருக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது. இரண்டாவதாக 2025 ஆகஸட் மாதமளவில் பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டியிருக்கும்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடையவேண்டி வந்தால் அரசாங்கம் மிகவும் பலவீனமான நிலைக்கு தள்ளப்படும். புதிய ஜனாதிபதி தற்போதைய பாராளுமன்றத்தை அதன் பதவிக்காலம் 2025 ஆகஸ்டில் முடிவடையும் வரை நீடிக்கவிடாமல் உடனடியாகவே கலைத்து உரிய காலத்துக்கு முன்கூட்டியே பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

### அரசாங்கத்தின் அச்சம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கும் தேர்தல் முறையை மாற்றுவதற்கும் அவசரமாக செய்வதற்கான முயற்சி குறித்த செய்திகள் அந்த முயற்சியில் இறங்குவதற்கு முன்னதாக மக்களினதும் அரசியல் கட்சிகளினதும் மனநிலையை அறிந்துகொள்ளும் நோக்கத்துடன் வெளியிடப்பட்டவையாக இருக்கலாம்.

சில ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு அப்பால் அந்த முயற்சியின் பின்னணியில் இருக்கக்கூடிய கோட்பாடு மற்றும் செயன்முறை பற்றி பெரிதாக எதுவும் தெரியாது. ஒளிவுமறைவின்றி எதுவும் செய்யப்படுவதாக இல்லை.

ஆனால், பெரும் செலவை ஏற்படுத்தக்கூடிய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக மக்களின் கருத்துக்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடும் என்ற சாத்தியம் தேர்தல் ஆணைக்குழுவை மீண்டும் செயலில் இறங்கவைத்திருக்கிறது போன்று தோன்றுகிறது.

நீண்டகாலமாக தாமதிக்கப்படும் உள்ளூராட்சி தேர்தல்கள் விரைவில் நடத்தப்படுவதை உறுதிசெய்வதற்கான புதிய முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கூறியிருக்கிறார். அரசாங்கத்தின் நிதி நிலைமை தற்போது மேம்பட்டிருப்பதை தாங்கள் கருத்தில் எடுத்திருப்பதாகவும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பில் சில நீதிமன்ற தீர்ப்புகள் வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்களை ரத்து செய்வதற்கான தீர்மானத்துக்கு பொதுநிருவாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனை குழுவில் செப்டெம்பர் 20 ஆம் திகதி ஏகமனதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டபோது தேர்தல் ஆணைக்குழுவின் அந்தஸ்து அதன் தாழ்வெல்லைக்கு சென்றிருந்தது எனலாம்.

> **உள்ளூராட்சி தேர்தல்களையும் மாகாணசபை தேர்தல்களையும் நடத்துவதற்கு விடாப்பிடியாக மறுத்துவரும் அரசாங்கம் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பபை நடத்துவது குறித்து பேசும் விசித்திரம்.**

உள்ளூராட்சி தேர்தல்களுக்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்குமாறு அரசாங்க திறைசேரியிடம் தேர்தல் ஆணைக்குழு திரும்பத்திரும்ப விடுத்த கோரிக்கைகள் அலட்சியம் செய்யப்பட்ட பிறகே அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியின் விளைவாக தேர்தல்களுக்கு செலவிட போதுமான பணம் இல்லை என்ற காரணத்தை கூறியே உள்ளூராட்சி தேர்தல்களை அரசாங்கம் ஒத்திவைத்தது.

உள்ளூராட்சி தேர்தல்களுக்காக தேசிய பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்திவைக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் கூட அலட்சியம் செய்கிற அளவுக்கு அந்த தேர்தல்களை நடத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது என்ற முடிவில் அரசாங்கம் உறுதியாக இருந்தது.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதிலான தாமதம் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கும் ஒரு நேரத்தில் அதன் நியாயப்பாட்டை இல்லாமல் செய்திருக்கக்கூடிய ஒரு தோல்வியை தடுத்திருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை அலட்சியம் செய்த அரசாங்கத்தின் தீர்மானம் ஜனநாயகம் தடம்மாறிச் செல்கிறது என்பதன் அறிகுறியாகும். அதே போன்று மீண்டும் நீதிமன்றங்களின் தீர்ப்பை அரசாங்கம் அலட்சியம் செய்யக்கூடாது என்பதே எதிர்பார்ப்பாக இருக்கிறது.

பலவந்தமாக ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு உறங்கு நிலைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட பிறகு மீண்டும் செயலில் இறங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு எடுத்திருக்கும் முடிவு சில குறிப்பிட்ட முக்கியமான பொறி முறைகளின் நிறுவன ரீதியான நேர்மை சேதமுறாது அப்படியே இருக்கிறது என்பதற்கான நேர்மறையான அறிகுறியாகும். தருணம் உகந்ததாக இருக்கும் பட்சத்தில் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களும் நேர்மையுடன் ஆக்கபூர்வமாக செயற்படுவதற்கு இது உத்வேகத்தைக் கொடுக்கலாம்.

குறிப்பாக, நன்றாக இயங்குகின்ற ஜனநாயகத்தில் நிறைவேற்று அதிகாரத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் சமதையானதாக இருக்கவேண்டிய நீதித்துறையை பொறுத்தவரை இது உண்மையாகும்.

### காலாவதியான ஆணை

உள்ளூராட்சி தேர்தல்களையும் மாகாணசபை தேர்தல்களையும் நடத்துவதற்கு அரசாங்கம் திரும்பத்திரும்ப மறுத்துவருகின்ற ஒரு நேரத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு அது காட்டும் ஆர்வம் ஒரு அரசியல் உபாயத் தன்மையானது என்ற ஊகங்களுக்கு வழிவகுக்கிறது.

புதிய ஜனாதிபதி ஒருவரினால் கலைக்கப்படுவதில் இருந்து தற்போதைய பாராளுமன்றத்தை பாதுகாப்பது என்பது சுலபமான ஒரு காரியமாக இருக்கப் போவதில்லை. ஜனாதிபதி பதவியை ஒழிப்பதுவும் கூட சுலபமானதாக இருக்கப்போவதில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி மாத்திரம் தற்போதைய அரசியலமைப்பின் மைய அம்சம் அல்ல. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன ஒரு தடவை கூறியது போன்று பாராளுமன்றத்தின் “விருப்பு வெறுப்புகளில்” இருந்து விடுபட்டவராக ஜனாதிபதி இருக்கிறார்.

ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட்டால், பாராளுமன்றப் பெரும்பான்மையின் விருப்பு வெறுப்புகளில் இருந்து விடுபட்டவராக தற்போது இருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் எதிர்காலம் பற்றிய கேள்வி ஒன்று எழும்.

மாகாணங்களின் ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டவர் என்ற வகையில் மாகாணசபை முறைமையிலும் மைய வகிபாகத்தைக் கொண்டவராக ஜனாதிபதி விளங்குகிறார்.

ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கான முயற்சிகள் தொடர்பில் செய்திகள் வெளியானதற்கு சமாந்தரமாக புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்புக்குழு அதன் கூட்டமொன்றை நடத்தியது ஒன்றும் தற்செயலானது அல்ல. அந்த கூட்டத்தில் உரையாற்றியவர்கள் ஒருவர் மாறி ஒருவர் நாட்டின் ஐக்கியத்துக்கும் சுயாதிபத்தியத்துக்கும் மாகாண சபைகள் மற்றும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தினால் தோற்றுவிக்கப்படுவதாகக் கூறப்படும் ஆபத்து பற்றியே பேசினார்கள்.

(16ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச உறவுகளில் மாற்றம்?...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

என ரஷ்ய அதிபர் புட்டின் கூறியுள்ளார். இந்த மோதலில் பொதுமக்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இதனை முவுக்கு கொண்டு வர வேண்டும் என புட்டின் கூறியுள்ளார்

இந்த மோதலை முடிவுக்கு கொண்டு வர இஸ்லாமிய நாடுகளும் முயன்று வருகின்றன. ஆனால் மோதலை தீவிரப்படுத்தும் விதமாக அமெரிக்கா, தனது இரு போர் கப்பலை காசாவுக்கு அருகே நிலை நிறுத்தியுள்ளது. பிரிட்டனும் தனது போர் கப்பலை அனுப்ப முயல்கிறது. இவை மத்திய கிழக்கு பகுதியில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

அதே வேளை துருக்கி தனது போர் கப்பலை காசா நோக்கி திருப்பி விட்டிருக்கிறது. ரஷ்யாவும் தனது பங்குக்கு துருக்கிக்கு தனது போர் விமானங்களை அனுப்பியுள்ளது.

ஒரு வேளை அமெரிக்காவோ அல்லது நேட்டோ படைகளோ இஸ்ரேலுக்கு ஆதரவாக களமிறங்கினால், ஈரான், துருக்கி, ரஷ்யா மற்றும் இதர அரபு நாடுகளும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக சண்டையில் குதிக்கும் எனும் ஊகங்களும் உள்ளன.

இந்நிலமை பாரிய போரையே இழுத்துவிட வாய்ப்பிருக்கிறது. எனவே உலகின் மற்றய நாடுகள் இந்த விஷயத்தை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. இந்நிலையில் ரஷ்யா இந்த பிரச்னைக்கு தீர்வு காண சில தீர்வுகளை கூறியுள்ளது.

**சுதந்திர பாலஸ்தீனம் தான் தீர்வு:**

காமன்வெல்த் சுதந்திர நாடுகளின் உச்சி மாநாட்டில் பேசிய புட்டின், பாலஸ்தீனிய-இஸ்ரேல் மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு ரஷ்யா முன்மொழிகிறது என்று கூறியுள்ளார். அமைதியான வழிகளில் இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பது அவசியம். இஸ்ரேல் தன்னை தற்காத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. ஆனால் அதேநேரம் இந்த பிரச்னைக்கு நிரந்தர தீர்வு என்பது, கிழக்கு ஜெருசலேமை அதன் தலைநகராக கொண்டு சுதந்திர பாலஸ்தீனத்தை உருவாக்குவதன் மூலமாகதான் அமையும் என்றும் கூறியுள்ளார்.

**சிரியாவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்:**

இதற்கிடையில் சிரியா, ஈரான் அதிபர்கள், ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக உலகின் அனைத்து சுதந்திர மக்களும், இஸ்லாமிய மற்றும் அரபு நாடுகளும் ஒரே நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த சிரியாவில், அதன் தலைநகர் டமாஸ்கஸ், அலெப்போ ஆகிய இரண்டு விமான நிலையங்களில் இஸ்ரேல் 13.10.23 ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சிரியாவும் பதில் தாக்குதலை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதலில், விமானங்கள் தரையிறங்கும் ஓடுபாதைகள் பெரும் சேதமடைந்ததால், அனைத்து விமான சேவைகளும் தடைப்பட்டன. இவ்வாறிருக்க, சிரியாவின் விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது சர்வதேச சட்டமீறல் என ரஷ்யா குற்றம்சாட்டியிருக்கிறது.

**பாலஸ்தீனத்திற்கு செச்சினியா படைகள்:**

பாலஸ்தீனத்திற்கு உதவ செச்சினியாவின் தலைவர் ரம்ஜான் கதிரோவ் படை அனுப்பப்படும் எனக் கூறியுள்ளார். கதிரோவைட்ஸ் என்பது ரஷ்யாவின் செச்னியாவில் உள்ள ஒரு துணை இராணுவ படையாகும்.

இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டணியை உருவாக்க வேண்டும். அதேபோல மேற்கு நாடுகள், போராளிகளை அழிப்பதாக சொல்லிக் கொண்டு பொதுமக்களை கொல்வதை தவிர்க்க வேண்டும். இந்த போரில் நாங்கள் பாலஸ்தீனத்தை ஆதரிக்கிறோம். நாங்கள் இந்த போருக்கு எதிராக இருக்கிறோம். இது மற்ற மோதல்களைப் போலல்லாமல் மேலும் மேலும் அதிகரிக்கலாம். மத்திய கிழக்கில் ஒழுங்கை மீட்டெடுக்க அமைதி காக்கும் படையாக செச்சென் பிரிவுகளை நிலைநிறுத்த தயாராக இருக்கிறோம் என்று செச்சினியா படையின் தலைவரான ரம்ஜான் கதிரோவ் கூறியுள்ளார்.

தற்போது ரஷ்யாவின் துணை இராணுவ படைகளில் ஒன்றான செச்செனிய படைகள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து அவசியமெனில் பாலஸ்தீனத்தில் சண்டை செய்வோம் என அறிவித்துள்ளதுள்ளனர்.

ஏற்கெனவே ஈரான் இந்த போரில் பாலஸ்தீனத்திற்கு உதவுவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் ஈரான் அதை மறுத்திருக்கிறது. மட்டுமல்லாது ஏதாவது ஒரு குண்டு கூட ஈரான் பக்கம் திரும்பினால் இஸ்ரேல் பேரழிவை சந்திக்க நேரும் என்றும் எச்சரித்தது. இஸ்ரேலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அரபு நாடுகளும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இருப்பதால் மற்றய நாடுகள் இந்த விஷயத்தை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. ●

# நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கு அரசாங்கம் நாட்டம் காட்டுகின்ற அதேவேளை முனனாள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்புக்குழு ஜனாதிபதி பதவியை மேலும் பலப்படுத்தவேண்டும் என்று வாதிடுவது ஒரு முரண்நகையாகும். அதனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது என்பது பெரு சர்ச்சைகளை தோற்றுவிக்கும்.

தற்போதைய தருணத்தில் தேர்தல் முறையை மாற்றுவதற்கான அரசாங்கத்தின் திட்டமும் கூட ஒப்பேறுவது சாத்தியமில்லை. உத்தேச புதிய தேர்தல் முறை இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதிகள் தெரிவாவதற்கு பாதகமாக அமையும் என்பதால் அவர்கள் அதற்கு தங்களது ஆதரவை வழங்க முன்வரப்போவதில்லை.

தேர்தல் முறையில் மாற்றத்தைச் செய்வதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் யோசனை 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய மாகாணசபை தேர்தல்களை இன்று வரையில் நடத்த முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திய செயன்முறை பற்றிய பீதியை மீண்டும் ஏற்படுத்துகிறது.

அந்த மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியிருந்த நேரத்தில் தேர்தல் சட்டத்துக்கு பெண்களுக்கான ஆசன ஒதுக்கீடு உட்பட சில நேர்மறையான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்மொழிந்தது.

நடைமுறையில் இருந்த மாகாணசபை தேர்தல் சட்டம் செல்லுபடியற்றதாக்கப்பட்டதும் சீர்திருத்தங்களை உள்ளடக்கிய புதிய சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியது. அதற்கு பிறகு மாகாணசபைகள் ஒரு இயங்கா நிலைக்கு வந்தன.

அதே போன்ற நிலைமை பாராளுமன்றத்துக்கும் ஏற்படுமானால் அது நாட்டின் ஜனநாயகத்துக்கு பாரிய ஒரு அனர்த்தமாகப் போய்விடும். மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியோ, பாராளுமன்றமோ, மாகாணசபைகளோ அல்லது உள்ளூராட்சி சபைகளோ இல்லாத ஒரு நிலைமையை அது கொண்டுவந்துவிடும். பதிலாக மக்களின் ஆணை காலாவதியான அரசாங்கத் தலைவர்களையே நாடு கொண்டிருக்க வேண்டியிருக்கும். ●





